بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 43 & 44

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் ஸானீ 30 ஜமாதில் அவ்வல் 07 ★
ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அஃகா 23 -30 ★ 23 -30 அக்டோபர் 2025


## அல்லாஹ்வின் கட்டளை

نَزَّلَ عَلَیۡکَ الۡکِتٰبَ
بِالۡحَقِّ مُصَدِّقًا لِّمَا بَیۡنَ یَدَیۡہِ
وَاَنۡزَلَ التَّوۡرٰىۃَ وَالۡاِنۡجِیۡلَ ۙ

**பொருள்**

அவன் உம்மிடத்து உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தைத் தனக்கு முன்னுள்ள (இறையறிவிப்பான)தை உறுதிப்படுத்தக் கூடியதாக இறக்கினான். மேலும் தவ்ராத்தையும், இன்ஜீலையும் அவன் இறக்கினான். (3:4)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அவர்களோ விளையாடி விட்டு திரும்பி வந்து விடுவார்கள் ஆனால் நான் கியாமத் வரை நிலை பெற்றிருக்கக் கூடிய அந்த கிரிக்கெட்டை விளையாடிக் கொண்டிருக்கின்றேன்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

**முன்னேற்றங்கள் எல்லைகளற்றவையாகும்**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

சொர்க்கத்திலும் நம்பிக்கையாளர்களுக்கு முன்னேற்றங்கள் இருக்கின்றன. மேலும் முன்னேற்றங்கள் என்பது நபிமார்களுக்கும் இருக்கின்றன. அவ்வாறில்லை எனில் துரூத் ஷரீஃப் ஏன் ஓதப்படுகின்றது?

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான சாதனை**

ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வளவு நீண்ட ஆயுளை கொடுப்பதற்கு மக்கள் வீணான முயற்சிகளை செய்கின்றனர். நீண்ட வாழ்விற்கு ஆசை கொள்வதற்கு அவருடைய குறைவான ஆயுள் என்ன விளைவை உருவாக்கியுள்ளது?

உலகம் சிலுவையால் நிறைந்துள்ளது. மேலும் எல்லா இடத்திலும் இணை வைத்தல் பரவியுள்ளது. ஆயினும் இவ்வளவு நீண்ட ஆயுளை பெறுவது ஒருவருக்கு சாத்தியமானதாக இருந்திருந்தால் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ( ஸல்) அவர்களே அதற்கு தகுதி படைத்தவராக இருந்தார்கள். அன்னாரோ சிறிய அளவிலான ஆயுளில் ஓர் உலகை ஏகத்துவ வாதிகளால் நிரப்பி விட்டார்கள். மேலும் அவர்களின் உள்ளத்தில் இறை நேசத்திற்கான உண்மையான உத்வேகத்தை நிரப்பி விட்டார்கள்.

**கியாமத் வரை விளையாடப்படக் கூடிய கிரிக்கெட்**

காதியானின் தஃலீமுல் இஸ்லாம் மதரஸாவின் சிறுவர்களுக்கான மட்டைப்பந்து போட்டி நடைபெற்றது. சில சான்றோர்களும் பிள்ளைகளின் மகிழ்ச்சியை அதிகரிப்பதற்காக

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் ......

## மனிதன் நிரந்தர வாழ்விற்காக படைக்கப்பட்டுள்ளான்; மேலும் ஆன்மிக முன்னேற்றங்களுக்கான வழிப் பாதை அவனுக்காக திறந்து கொடுக்கப்பட்டுள்ளது என்று இஸ்லாம் கூறுகின்றது

**மரணத்திற்கு பிறகு எழுப்பப்படுதல் மீது நம்பிக்கை கொள்வது என்பது எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால் அது மனிதனுள் அல்லாஹ்வின் மீதான அச்சத்தையும், அவன் மீதான நேசத்தையும் உருவாக்கி விடுகின்றது. மேலும் அவனது செயல் சீர்திருத்தத்திற்கான ஒரு முக்கிய வழிமுறையாகும்**

اِنۡ ہِیَ اِلَّا حَیَاتُنَا الدُّنۡیَا نَمُوۡتُ
وَنَحۡیَا وَمَا نَحۡنُ بِمَبۡعُوۡثِیۡنَ

பொருள்:

நம்முடைய இவ்வுலக வாழ்க்கையினைத் தவிர வேறொரு வாழ்க்கை இல்லை. நாம் மரணிக்கின்றோம்; நாம் வாழ்கின்றோம்; நாம் மரணமடைந்ததன் பின்னர் (மீண்டும்) எழுப்பப்படப்போவதில்லை. (23:38)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

இதில் அல்லாஹ் இந்த விஷயத்தை கூறியுள்ளான். அதாவது நபிமார்களை நிராகரிக்கின்றவர்களின் நிராகரிப்பிற்கான இரண்டாவது காரணத்தை கூறியுள்ளான். அதாவது (நிராகரிப்பாளர்களாகிய) அந்த மக்கள் மரணத்திற்கு பிறகு (மறுமையில்) உயிர்பிக்கப்படுவதை நிராகரிக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். மேலும் இந்தக் காரணத்தால் தங்களுடைய செயல்கள் நல்லதா? அல்லது தீயதா? என்பது தொடர்பாக ஒருபோதும் சரியான உணர்வு அவர்களிடம் உருவாகுவதில்லை. அவர்கள் எந்த வழியில் சென்று கொண்டிருக்கிறார்களோ அதில் கண்களை மூடிக்கொண்டு சென்று கொண்டிருக்கின்றார்கள். மேலும் நாம் உண்ண வேண்டும் ; பருக வேண்டும்; மேலும் இந்த

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் .....

## நபிமொழி

**ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களின் மகத்தான சாதனை**

தாரிக் பின் ஷஹாப் அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதை செவியுற்றார்கள்:

நான் மிக்தாத் பின் அஸ்வத் அவர்களுடைய எப்படிப்பட்ட ஒரு சாதனையைக் கண்டேன் என்றால், அதற்கெதிரில் எனது அனைத்து நன்மைகளுக்கும் எந்த மதிப்பும் கிடையாது. அந்தோ! இந்த பணியை நான் செய்திருக்க கூடாதா! என்பது எனது ஆசையாகும்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் (பத்ர் போர் சந்தர்ப்பத்தில்) இணை வைப்பாளர்களுக்கு எதிராக போரிடுவதற்கு அழைப்புவிடுத்துக் கொண்டிருந்தார்கள் (நீங்கள் போருக்கு தயாராக உள்ளீர்களா? இல்லையா? என்று அன்னார் (ஸல்) தமது ஸஹாபிகளிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்). அப்போது மிக்தாத் பின் அஸ்வத் எழுந்தார்கள்; மேலும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் இவ்வாறு கூறினார்கள்:

ஹுஸூர் (ஸல்) அவர்களே ! செல்லும்; நீரும் உமது இறைவனும் சென்று போரிடுங்கள்; நாங்கள் இங்கே(யே) அமர்ந்திருப்போம்; (மேலும் எதிரியுடன் போரிட செல்ல மாட்டோம்) என்று மூஸாவின் சமுதாயம் கூறியதைப் போன்று நாங்கள் (ஒருபோதும்) கூறமாட்டோம்; மாறாக, ஹுஸூர் (ஸல்) அவர்களே! நாங்கள் தங்களின் வலப் பக்கம் நின்றும் போரிடுவோம்; தங்களது இடப் பக்கம் நின்றும் போரிடுவோம்; தங்களுக்கு முன்னால் நின்றும் போரிடுவோம்; தங்களுக்கு பின்னால் நின்றும் போரிடுவோம். (நாங்கள் எல்லா சூழலிலும் தங்களுடன் இருப்போம். இதைக் கேட்ட) ஹுஸூர் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைந்தார்கள் என்றால் அன்னாருடைய அருளுக்குரிய முகம் மகிழ்ச்சியின் காரணமாக மலர்ந்திருந்தது.

(புஹாரீ, கிதாபுல் மகாஸீ)
(ஹதீக்கத்துல் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 997)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தாயிஃப் மற்றும் ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு**

ஹக்கீம் பின் ஹிஸாமிற்கு அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் நூறு ஒட்டகங்களையும், பின்னர் அவரது விண்ணப்பத்திற்கேற்ப மேலும் இருநூறு ஒட்டகங்களையும் வழங்கினார்கள். மேலும் கூறினார்கள்: ஹக்கீமே! இந்தச் செல்வம் நல்லதும், இனிமையானதும் ஆகும். எவர் இதை மனயிச்சையின்றிப் பெறுகிறாரோ அவருக்கு இதில் பரக்கத் இருக்கும். மேலும் எவர் இதை பேராசையுடன் பெறுகிறாரோ அவருக்கு இதில் பரக்கத் இருக்காது. உணவு உண்ட பிறகும் திருப்தி அடையாதவனைப் போன்றவனாவான் அவன். மேலே உள்ள கை அதாவது, கொடுக்கும் கை கீழே உள்ள கையை விட அதாவது, வாங்கும் கையை விடச் சிறந்தது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருந்தன்மையும், கருணையும் எந்த அளவுக்கு இருந்தது என்றால், வெளிப்படையாக இலக்கை அடையாமல் திரும்பும்போதும் கூட அம்மக்களுக்கு எதிராகச் சாபமிடுவதற்குப் பதிலாக

اَللّٰهُمَّ اهْدِ ثَقِيْفًا وَّاْتِ بِهِمْ مُسْلِمِيْنَ என்று துஆ செய்தார்கள். என்று துஆ செய்தார்கள்.

பொருள்:அல்லாஹ்வே! ஸகீஃப் குலத்தினருக்கு நேர்வழி காட்டுவாயாக! அவர்களை முஸ்லிம்களாகக் கொண்டு வருவாயாக!

சில நயவஞ்சகர்கள் செல்வப் பங்கீட்டில் ஆட்சேபனை தெரிவித்து அவமரியாதையாகவும் கண்ணியக்குறைவாகவும் நடந்துகொண்டனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நவூதுபில்லாஹ்! நீதி நேர்மையுடன் செயல்படவில்லை என்றும், அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப செயல்படவில்லை என்றும் குற்றம் சாட்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கேள்விப்பட்டபோது அன்னாருடைய அருளுக்குரிய முகம் சிவந்துவிட்டது. மேலும் அல்லாஹ்வும், அவனது தூதரும் நீதியுடன் செயல்படவில்லை என்றால் பின்னர் வேறு யார் நீதியுடன் நடந்து கொள்வார்? என்று கேட்டார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 செப்டம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தபூக் மாதம் 19 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

கடந்த குத்பாக்களில் தாயிஃப் போர் பற்றிய குறிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சென்ற ஒரு நபித்தோழருக்கு, தாயிஃப் வாசிகள் அவருக்கு எந்தத் தீங்கும் நேராது என்று உத்தரவாதம் அளித்திருந்தனர். ஆனால், அவர் கோட்டைக்கு அருகில் சென்றபோது அவர் ஷஹீதாக்கப்பட்டார். அம்மக்கள் உடன்படிக்கையை மீறினர். தாயிஃப் மக்களின் இந்த உடன்படிக்கை மீறலுக்குப் பிறகும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமாதான முயற்சியைக் கைவிடவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹன்ஸலா பின் ரபீஃ (ரலி) அவர்களை மீண்டும் தாயிஃப் மக்களிடம் அனுப்பினார்கள். அவர்கள் கோட்டைக்கு அருகே சென்று பேச்சுவார்த்தைக்கான செய்தியை அனுப்பியபோது, அவர்களில் சிலர் பேசுவதற்காக வெளியே வந்தனர். மேலும், ஹஸ்ரத் ஹன்ஸலா (ரலி) அவர்கள், நீங்கள் சமாதானம் விரும்புகிறீர்களா? இல்லையா? என்று அவர்களிடம் கேட்டனர். அவர்கள் ஒன்றும் கூறாமல் ஹஸ்ரத் ஹன்ஸலா (ரலி) அவர்களைத் தாக்கி அன்னாரைக் கோட்டைக்குள் கொண்டு செல்ல முயன்றனர். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹன்ஸலாவை மீட்டு வருபவர் யார்? என்று கேட்டார்கள். மேலும், அவரை மீட்டு வருபவருக்கு நம்முடைய அனைத்துப் போராளிகளுக்கும் கிடைக்கும் நற்கூலியும், நன்மையும் கிடைக்கும் என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஓடிச்சென்று இணைவைப்பவர்களின் பிடியிலிருந்து ஹஸ்ரத் ஹன்ஸலாவை விடுவித்துக் கொண்டு வந்தார்கள். திரும்பி வரும்போது எதிரிகள் கோட்டையிலிருந்து கற்களை எறிந்தனர். ஆனால் அவர்கள் காஃபிர்களின் கல்வீச்சிலிருந்து பாதுகாப்பாக இருந்தனர்.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 352-353)

கடந்த குத்பாக்களில் கூறப்பட்டது போல, தாயிஃப் மற்றும் ஹவாஸின் மக்களுக்கு மக்காவாசிகளுடன் - குறிப்பாக குறைஷிகளுடன் குடும்ப உறவும், ஆழமான பொருளாதார தொடர்புகளும் இருந்தன. திருமண உறவுகள் மூலமாகவும் பரஸ்பர தொடர்புகள் இருந்தன.

இதன் காரணமாக, ஹஸ்ரத் அபூஸுஃப்யான் பின் ஹர்ப் மற்றும் ஹஸ்ரத் முகீரா பின் ஷுஅபா ஆகியோர் சமாதானத்திற்காக கோட்டைக்குள் சென்றனர். ஆனால் அவர்களுக்கும் வெற்றி கிடைக்கவில்லை. இருப்பினும் கோட்டைவாசிகள் அவர்களிடம், முஹம்மது (ஸல்) அவர்களிடம் எங்கள் தோட்டங்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டாம் என்று கூறுங்கள் என்று ஒரு கோரிக்கை வைத்தனர். அல்லாஹ்வின் பொருட்டும், உறவு முறையின் பொருட்டும் அவற்றை அப்படியே விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டனர். அவர்கள் (ஒருபுறம்) எந்த உடன்படிக்கையையும் மதிக்காமல் இருந்து கொண்டு (மறுபுறம்) தங்கள் மீது கருணை காட்டும்படி கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோட்டங்களை அழிக்கும் உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள் என்று முன்பே கூறப்பட்டு விட்டது.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 358-359)

பல நாட்களாக முற்றுகையிட்டிருந்தார்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் உயர்ந்த பெருந்தன்மை மற்றும் பொறுமைக்கான சான்றை வழங்கினார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் ஒரு தன்னிகரற்ற அம்சமாகும். தோட்டங்களை வெட்டும் உத்தரவு (திரும்ப பெறப்படாமல்) இருந்திருந்தால் அது போரின் போக்கை முஸ்லிம்களுக்குச் சாதகமாக மாற்றியிருக்கக்கூடிய ஒரு போர்த் தந்திரமாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் குறிப்பிட்டும், இரத்த உறவையும் குறிப்பிட்டும் வேண்டியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். மேலும், வெளிப்படையில் ஒரு பெரிய போர் இழப்பை ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில், எந்த அடிமை கோட்டை மதிலிலிருந்து இறங்கி நம்மிடம் வந்துவிடுவார்களோ அவர் சுதந்திரமானவர் ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கச் செய்திருந்தார்கள். இதனால் 23 அடிமைகள் இறங்கிச் சென்று முஸ்லிம்களுடன் இணைந்துகொண்டனர். இதனால் தாயிஃப் மக்கள் மிகவும் வருந்தினர். அவர்கள் அனைவரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடுதலை செய்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரையும்

ஒரு முஸ்லிமின் பொறுப்பில் ஒப்படைத்து, அவர்களின் பராமரிப்புப் பொறுப்பையும் அந்த முஸ்லிமிடம் கொடுத்தார்கள்.
(ஷரஹ் ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துன்யா, தொகுதி 5, பக்கம் 384,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

அந்த அடிமைகளுக்கு மார்க்கத்தை நன்றாகக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் தொடர்பாக இந்த அறிவுரையை வழங்கினார்கள். சில காலத்திற்குப் பிறகு, தாயிஃப் மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபோது அவர்கள் தங்கள் அடிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களைத் திருப்பித் தருமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள். அந்த அடிமைகளில் சிலர் இஸ்லாமிய வரலாற்றில் நன்மையிலும், இறையச்சத்திலும் பெயர் பெற்றனர். அவர்களில் **ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) என்பவரும் ஒருவராக இருந்தார்.**
(பாஷ்மீல் அவர்களின் கஸ்வா ஹுனைன் என்ற நூல், பக்கம் 236- 237, நஃபீஸ் அகடமி)

ஒரு சந்தர்ப்பத்தில், உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரி என்பவர், கோட்டைக்குள் சென்று பனூ ஸகீஃப் குலத்தினருக்கு இஸ்லாத்தின் அழைப்பைக் கொடுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார். உயைனா பின் ஹிஸ்னின் அறிமுகம் என்னவென்றால், அவர் அகழ்ப் போரின்போது காஃபிர்கள் தரப்பில் பனூ ஃபஸாரா குலத்தின் தலைவராக இருந்தார். அகழ்ப் போரில் காஃபிர்களின் தோல்விக்குப் பிறகும் அவர் மதீனாவைத் தாக்கத் திட்டமிட்டார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகரத்திற்கு வெளியே சென்று அவரது தாக்குதலைத் தடுத்து, பின்வாங்கும் கட்டாய நிலைக்கு அவரை உள்ளாக்கினார்கள். அவர் மக்கா வெற்றிக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்று அதிலும் பங்கேற்றார். மக்கா வெற்றியின்போது வெளிப்படையாக அவர் ஒரு முஸ்லிமாக இருந்தார். ஹுனைன் மற்றும் தாயிஃப் போர்களிலும் அவர் பங்கேற்றார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் கிளர்ச்சி செய்த முர்தத்களுடன் சேர்ந்து அவரும் முர்தத் ஆகி குழப்பத்திற்கு ஆளானார்."தான் நபியென" வாதிட்ட கிளர்ச்சியாளரான துலைஹாவின் பக்கம் ஈர்க்கப்பட்டு அவனிடம் பைஅத் செய்து, அவனுடன் சேர்ந்து இஸ்லாமியப் படைகளுக்கு எதிராகப் போரிட்டார். அதாவது, இஸ்லாமிய படைகளுக்கெதிராக போரில் கலந்து கொண்டார். படுதோல்வி அடைந்து கைதியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்பு கொண்டுவரப்பட்டபோது, அவர் தன் செயலுக்காக வருத்தம் தெரிவித்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரை மன்னித்துவிட்டார்கள். அவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். அப்போது அவர், இதற்கு முன்பு நான் ஒருபோதும் ஈமான் கொண்டதில்லை என்றும் கூறினார். அவர் ஒரு முரட்டுத்தனமான நபராகவும்,கடுமையாகப் பேசும் நபராகவும் இருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. அவர் தனது கோத்திரத்தின் பிரபலமான போர்வீரராகவும் தலைவராகவும் இருந்தார். **"அல் அஹ்மக்குல் மதாஃ" என்று அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்ததாக அவரைக் குறித்து வருகின்றது.**பொருள்: 'ஒரு முட்டாள் தலைவர்'

எவ்வாறிருப்பினும், நான் செல்கிறேன் என்று அவர் கூறியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி கொடுத்தார்கள். உயைனா கோட்டைக்குள் சென்று பனூ ஸகீஃப் மக்களிடம் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுப்பதற்குப் பதிலாக, நீங்கள் கோட்டையில் உறுதியாக நிலை கொண்டிருங்கள்; ஏனெனில் நமது நிலைமை ஓர் அடிமையை விட மோசமாகி வருகிறது என்று கூறினார்.

ஓர் அறிவிப்பில், எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் கோட்டையைக் கைவிடாதீர்கள்; எந்த விஷயத்தாலும் பாதிக்கப்படவோ கவலைப்படவோ வேண்டாம்! என்றும் கூறியதாக உள்ளது. உயைனா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பியபோது, உயைனாவே! நீ அவர்களிடம் என்ன கூறினாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், தான் அவர்களை இஸ்லாத்தை ஏற்கும்படி கூறியதாகவும், மார்க்கத்தின் அழைப்பை விடுத்ததாகவும், நரகத்திலிருந்து எச்சரித்ததாகவும், சொர்க்கத்தின் வழியைக் காட்டியதாகவும் கூறினார். ஆனால் அல்லாஹ் வஹீ மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர் அங்கு என்ன கூறிவிட்டு வந்தார்? என்பதை அறிவித்திருந்தான். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீ பொய் சொல்கிறாய்? என்று கூறி, உயைனா அங்கு பேசிய அனைத்து வார்த்தைகளையும் மீண்டும் கூறினார்கள். இதைக் கேட்டதும் உயைனா ஆச்சரியமடைந்தார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் உண்மையே சொல்கிறீர்கள்; நான் எனது இந்தச் செயலுக்காக தங்களிடமும், அல்லாஹ்விடமும் தவ்பா செய்கிறேன் என்றார்.
(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 168, தொகுதி 2, பக்கம் 376, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2002-ம் ஆண்டு)

எவ்வாறிருப்பினும், (அவருக்குள்) அப்போதும் ஈமான் முழுமையாக நிலைபெற்றிருக்கவில்லை.

முற்றுகையின் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நவ்ஃபல் பின் முஆவியா தைலி அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அவர், இது ஒரு நரி தன் குகையில் பதுங்கியிருப்பது போன்றது; தாங்கள் அதை பிடிக்க வேண்டும் என்று நிலையாக நின்றால் அதைப் பிடித்து விடலாம்; அதை விட்டுவிட்டால் அது தீங்கு செய்ய சக்தி அற்றது என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்து, நாளை திரும்புவோம். இன்ஷா அல்லாஹ்! என்று மக்களுக்கு அறிவிக்கச் செய்தார்கள்.
(தாரிகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 172, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1987-ம் ஆண்டு பதிப்பு)

இந்த முடிவு ஆலோசனையின் விளைவாக மட்டுமே எடுக்கப்பட்டதல்ல என்றும், அல்லாஹ்விடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட வழிகாட்டல் அல்லது சைகை கிடைத்ததனாலேயே எடுக்கப்பட்டது என்றும் தெரிகிறது.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவந்தார்கள். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர் திட்டங்களில், வெளிப்படையாக இவ்வளவு முக்கியமான, அவசியமான ஒரு வெற்றியைப் பாதியில் விட்டுவிட்டுத் திரும்பியது இதுவே முதல் முறையாகும். கருத்து கூறுபவர்களும், அறிவிப்பை எழுதக் கூடியவர்களும் என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளட்டும்! இதை விடக் கடினமான, சாத்தியமற்ற போர்க்களங்களில் கூட அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அசாதாரண வெற்றியையும், உதவியையும் வழங்கியதை நாம் வரலாற்றில் காண்கிறோம். பனூ குறைழா மற்றும் கைபர் வெற்றிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஹுனைன் உதாரணமும் அப்போது மிக அண்மையில் நிகழ்ந்த ஒன்றாகும்; அதை எப்படி மறக்க முடியும்! ஹுனைன் போரின் போது சில மக்காவாசிகள் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோல்வியை எதிர்பார்த்தனர். அவர்களில் ஒரு கூட்டம் அன்னாருடைய தோல்வியைப் பார்ப்பதற்காகவே உடன் வந்திருந்தது. ஆனால் அப்போதும் ஓர் உறுதியான தோல்வியை அல்லாஹ் ஆச்சரியமான, அசாதாரணமான, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியாக மாற்றினான். ஹுனைனில் இருந்து தோற்று ஓடிய அதே படைதான் தாயிஃபில் ஒளிந்திருந்தது. கடந்த கால இறை உதவியின் காட்சிகளின் ஒளியில் பார்க்கும்போது தாயிஃபை வெல்வது மிகவும் கடினமான ஒன்றோ அல்லது சாத்தியமற்ற செயலாகவோ இருக்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படையாக அந்த தோல்வியை ஏற்றுக்கொண்டு, முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்தார்கள்.

உண்மையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தப் படையெடுப்பும் எந்தவொரு மன எழுச்சியின் விளைவாக இல்லாமல், இது அவர்களின் வாழ்வின் ஒரு பிரகாசமான அம்சமாக இருப்பதை நாம் காண்கிறோம். போர்ச் செல்வங்களைப் பெறுவதற்காகவோ அல்லது நிலங்களைக் கைப்பற்றுவதற்காவோ அல்ல; மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வோர் அசைவும், சொல்லும் செயலும், எல்லாம் அறிந்த எல்லாம் தெரிந்த அல்லாஹ்வின் விருப்பத்திற்கு உட்பட்டதாக இருந்தது. அன்னாரின் முழு வாழ்க்கையும்,

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

**(அல் அன்ஆம்: 163) என்பதாக இருந்தது.**

பொருள்: என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும்

அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன என்று நீர் அவர்களிடம் கூறுவீராக! இந்த வசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அன்னாரின் வாழ்க்கை இருந்தது.

தாயிஃப் முற்றுகையின் போது, முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டல் கிடைத்தது என்பதைத் தெளிவாகக் காட்டும் இரண்டு சம்பவங்கள் நடந்தன. அதன் பேரில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்தார்கள். இது தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு கனவைப் பற்றிய குறிப்பு வருகிறது. இப்னு ஹிஷாம் இவ்வாறு எழுதியுள்ளார்:

தாயிஃப் முற்றுகையின்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அபூபக்ரே! இன்று நான் கனவில் ஒரு பாத்திரத்தில் வெண்ணெய் நிரப்பப்பட்டு எனக்குப் பரிசாக வந்ததைக் கண்டேன்; பின்னர் ஒரு சேவல் அதைக் கொத்தி அந்தப் பாத்திரத்தைக் கீழே தள்ளிவிட்டது என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட அபூபக்ர் (ரலி) அவர்கள், இந்த முறை நீங்கள் ஸகீஃப் குலத்தினரிடமிருந்து விரும்புவதை அடைய முடியாது என்பதே என் கருத்து என்று பதிலளித்தார்கள். அதாவது, இந்த முற்றுகை நமக்கு சாதகமாக அமைய வேண்டும் என்பதும், நாம் விரும்புகின்ற வெற்றி கிடைப்பது என்பதும் கடினமானதாகத் தெரிகிறது என்று கூறினார்கள். அதற்கு, என் கருத்தின்படியும், தற்போதைய நிலையில் அதை அடைவது சாத்தியமற்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 793, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு பதிப்பு)

இதேபோல், மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்ஊனின் மனைவியான ஃகவ்லா பின்த் ஹக்கீம் - அவரது பெயர் குவைலா என்றும் வந்துள்ளது - ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களுக்குத் தாயிஃபின் மீது வெற்றியை வழங்கினால், பாதியா பின்த் ஃகைலான் ல்லது ஃபாரியா பின்த் அகீலின் நகைகளை எனக்குக் வழங்குங்கள்!; ஏனெனில் ஸகீஃப் குலப் பெண்கள் அனைவரிலும் அவர்களைப் போல் விலையுயர்ந்த நகைகள் யாரிடமும் இல்லை என்று வேண்டினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஃகவ்லாவே! ஸகீஃபை வெல்ல எனக்கு அனுமதியே வழங்கப்படவில்லை என்றால் என்ன செய்வது? என்று பதிலளித்தார்கள். ஹஸ்ரத் ஃகவ்லா (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இதைக் குறிப்பிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஃகவ்லா என்ன பேசிக்கொண்டிருக்கின்றார்?; தாங்கள் அவரிடம் இவ்வாறு கூறியதாகக் கூறுகிறாரே! என்றார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! நான் அவ்வாறு கூறினேன் என்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாகப் புரிந்துகொண்டு, இந்த வெற்றியைப் பற்றியும், போரை தொடர்வதைப் பற்றியும் தங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லையா? என்று கேட்டார்கள். இல்லை! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்படியானால் நான் மக்களைப் புறப்படச் சொல்லட்டுமா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆகட்டும்! என்று கூறினார்கள். அனுமதி கிடைத்ததும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்படுவதற்கான அறிவிப்பை செய்ய வைத்தார்கள்.

(ஸூபுலுல் ஹூதா வர்ரஷாத், தொகுதி 5, பக்கம் 387, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

திரும்பிச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டபோது, அந்த அறிவிப்பைக் கேட்ட சில மக்கள், நாம் வெற்றி பெறமல் ஏன் திரும்புகிறோம்? என்று தங்களது எண்ணத்தை வெளிப்படுத்தினர். இது சில துடிப்பான இளைஞர்களின் எதிர்வினையாக இருந்தது. முதலில் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் சென்று, வெற்றி கிடைக்கும் வரை முற்றுகையைத் தொடர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கோரிக்கை வைக்குமாறு கேட்டனர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன முடிவெடுத்துள்ளார்களோ அது சரியானதாகும்! என்று அவர்கள் கூறிவிட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் அவர்களும் அவ்வாறு (அன்னாரிடம்) பேச மறுத்துவிட்டனர். அதன் பிறகு, இந்த உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்கள் தாங்களாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக, ஹுஸுர்! நாங்கள் போரிடுவோம்! என்று கூறினர். அவர்களின் விருப்பத்தின் பேரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சரி! நாளை காலை போரிடுங்கள்! என்றார்கள். அதன்படி, அடுத்த நாள் அவர்கள் போரிடச் சென்றபோது, காயங்களைத் தவிர வேறு எதையும் பெறவில்லை. அதன் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இன்ஷா அல்லாஹ்! நாளை நாம் திரும்புவோம் என்றார்கள். போரில் எந்த பயனையும் அடையாமல் காயமடைந்து திரும்பிய பிறகு அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்களின் கருத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ அலா மவாஹிபு லித்துன்யா, தொகுதி 4, பக்கம் 13 -14, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1996-ம் ஆண்டு)

இந்தப் போரில் காஃபிர்களில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஆனால், அவர்கள் கோட்டைக்குள் அடைபட்டிருந்ததால், அவர்களின் காயமடைந்தவர்கள் மற்றும் மேற்கொண்டு கொல்லப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. அதேபோல், முஸ்லிம்களில் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கையும் தெரியவில்லை; சில காயமடைந்தவர்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, இணைவைப்பாளர்களின் அம்பெய்தலால் காயமடைந்தவர்களில் ஹஸ்ரத் அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் என்பவரும் ஒருவர். ஓர் அம்பு அவரது கண்ணில் பாய்ந்ததால் கண் வெளியே வந்துவிட்டது. அவர் நேராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தன் கையில் கண்ணை வைத்துக் கொண்டு வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் இந்தக் கண் அல்லாஹ்வின் பாதையில் போய்விட்டது என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் விரும்பினால், நான் துஆ செய்வேன்; உமது கண் மீண்டும் அதன் இடத்தில் சரியாகிவிடும்; அல்லது கண்ணை விரும்பவில்லை என்றால், உமக்கு சொர்க்கம் கிடைக்கும்! என்றார்கள்.

ஓர் அறிவிப்பில், கண்ணை விரும்பவில்லை என்றால், சொர்க்கத்தில் உமக்கு கருணையின் ஊற்று கிடைக்கும் என்று கூறியதாக வருகிறது. அரபு மொழியில் 'ஐன்' என்பதற்கு கண் என்றும், நீரூற்று என்றும் பொருள் உண்டு.எனக்கு சொர்க்கமே விருப்பத்திற்குரியது என்று கூறி அபூ ஸுஃப்யான் தன் கையில் வைத்திருந்த கண்ணை எறிந்துவிட்டார். இவர் மக்கா வெற்றி வரை இஸ்லாத்தின் கடுமையான எதிரியாகவும், உஹத் போரில் காஃபிர்களின் படைத்தளபதியாகவும் இருந்த அதே அபூஸுஃப்யான் ஆவார்; இப்போது முஸ்லிம் ஆன பிறகு தியாகங்களில் முன்னணியில் காணப்பட்டார். அவரது மற்றொரு கண் யர்மூக் போரில் பாதிக்கப்பட்டு செயல் இழந்து போனது விசித்திரமான தற்செயலான நிகழ்வாக இருந்தது.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 373)

இதேபோன்று, மற்றொரு நபித்தோழரைக் குறித்த குறிப்பு கிடைக்கின்றது. அன்னார் (ரலி) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் மகன் அப்துல்லாஹ் ஆவார்கள். அன்னாரின் காயம் நீண்ட காலம் நீடித்து, அன்னாரது தந்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் அதே காயத்தின் விளைவாக அன்னார் (ரலி) மரணமடைந்தார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 169, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் ஹிஜ்ரீ 1423)

இந்தப் போரில் 12 நபித்தோழர்கள் ஷஹீத் ஆனார்கள். அவர்களின் பெயர்கள் இவ்வாறாகும்; ஹஸ்ரத் ஸயீத் பின் ஆஸ் (ரலி), ஹஸ்ரத் உர்ஃபதா பின் ஜன்னாப் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ உமையா(ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி), ஹஸ்ரத் ஸாயிப் பின் ஹாரிஸ் (ரலி) மற்றும் அவரது சகோதரர் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி), ஹஸ்ரத் ஜுலைஹா பின் அப்துல்லாஹ் (ரலி), ஹஸ்ரத் ஸாபித் பின் ஜஸஃ(ரலி) , ஹஸ்ரத்

ஹாரிஸ் பின் ஸஹ்ல் (ரலி) , ஹஸ்ரத் முன்ஸிர் பின் அப்துல்லாஹ்(ரலி) , ஹஸ்ரத் ருகைம் பின் ஸாபித் (ரலி) மற்றும் பின்னர் மரணமடைந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் (ரலி).

(ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 794 - 795, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2001-ம் ஆண்டு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இந்தப் போரில் அவர்களின் இரு மனைவிகளான ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) ஆகியோர் இருந்தனர். இவர்கள் இருவருக்கும் இரு கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. முற்றுகையின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இரு கூடாரங்களுக்கும் இடையில் தொழுது வந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஃது, பாகம் 2, பக்கம் 120, கஸ்வத்தே ரஸுலுல்லாஹ் அல்தாயிஃப், தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத் 1990-ம் ஆண்டு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனை நாட்கள் தாயிஃபை முற்றுகையிட்டிருந்தார்கள்? என்பது பற்றி பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. சிலர் பத்து இரவுகளுக்கு மேல் முற்றுகையிட்டதாகக் கூறுகின்றனர். பதினேழு இரவுகள் முற்றுகையிட்டதாகவும் கூறப்படுகிறது என்று இப்னு ஹிஷாம் கூறுகிறார். இருபது நாட்கள் முற்றுகையிட்டதாகவும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருபது இரவுகளையும் விட அதிகமான இரவுகள் முற்றுகையிட்டதாகவும் சிலர் கூறுகிறார்கள்.

ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் மக்களை முப்பது இரவுகளுக்கு அருகில் முற்றுகையிட்டதாக வருகிறது. ஸஹீஹ் முஸ்லிமில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அவர்களை நாற்பது இரவுகள் வரை முற்றுகையிட்டோம்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 792, தாருல் குதுபில் இல்மியா, 2001-ம் ஆண்டு பதிப்பு)

எவ்வாறாயினும், புறப்படும் நேரம் வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

آئِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

என்று ஓதியவாறு திரும்புங்கள்.

பொருள்: நாங்கள் திரும்புபவர்கள் ஆவோம்; நாங்கள் தவ்பா செய்பவர்கள் ஆவோம்; மேலும் நாங்கள் இறைவணக்கம் செய்பவர்கள் ஆவோம்; மேலும், நாங்கள் எங்கள் இறைவனைப் புகழக் கூடியவர்கள் ஆவோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பனூ ஸகீஃப் குலத்தினருக்கு எதிராக சாபமிடுங்கள் என்று கேட்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருந்தன்மையும், கருணையும் எந்த அளவுக்கு இருந்தது என்றால், வெளிப்படையாக இலக்கை அடையாமல் திரும்பும்போதும் கூட அம்மக்களுக்கு எதிராகச் சாபமிடுவதற்குப் பதிலாக,

اَللّٰهُمَّ اهْدِ ثَقِيْفًا وَأْتِ بِهِمْ مُسْلِمِيْنَ

என்று துஆ செய்தார்கள்.

பொருள்:

அல்லாஹ்வே! ஸகீஃப் குலத்தினருக்கு நேர்வழி காட்டுவாயாக! அவர்களை முஸ்லிம்களாகக் கொண்டு வருவாயாக! அதன் பிறகு, அங்கிருந்து திரும்புவதற்காக வாகனத்தில் ஏறியபோது, اَللّٰهُمَّ اهْدِهِمْ وَاكْفِنَا مُؤْنَتَهُمْ என்று துஆ செய்தார்கள்.

பொருள்:

அல்லாஹ்வே! அவர்களுக்கு நேர்வழி காட்டுவாயாக! அவர்களின் (ஆயுத) சப்ளை மற்றும் விநியோகத்தின் படைப் பிரிவிற்கு எதிராக நீயே எங்களுக்குப் போதுமானவனாக இருப்பாயாக!

ஏனெனில், வழிதவறிய படைப்புகள் தங்கள் படைப்பாளனின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதே அவர்களின் அசல் நோக்கமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த துஆவை அல்லாஹ் அவ்வாறே ஏற்றுக்கொண்டான். இதே தாயிஃப் மக்கள் ஒரு வருடம் முடிவதற்குள், ரமழான் மாதம், ஹிஜ்ரீ 9-ம் ஆண்டில் அனைவரும் முஸ்லிம்களாகிவிட்டனர்.

(ஷரஹ் ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துன்யா, தொகுதி 4, பக்கம் 15 -18, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இது பற்றி ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நோக்கிப் புறப்பட்டார்கள்; அதே நகரவாசிகள்தான் ஒரு காலத்தில் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கல்லால் அடித்து நகரத்திலிருந்து வெளியேற்றினர். அந்த நகரத்தை அன்னார் (ஸல்) சிறிது காலம் முற்றுகையிட்டார்கள். ஆனால், 'அவர்களை முற்றுகையிட்டு நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை; இப்போது அரேபியாவில் இந்த ஒரு நகரம் மட்டும் என்ன செய்துவிட முடியும்' என்று சிலர் ஆலோசனை கூறியதன் பேரில், முற்றுகையைக் கைவிட்டுத் திரும்பினார்கள். சில காலத்திற்குப் பிறகு, தாயிஃப் மக்களும் முஸ்லிம்களாகிவிட்டனர்.'

(தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 357)

ஹுனைன் போரில் கிடைத்த செல்வங்கள் பங்கிடப்பட்டது பற்றியும் குறிப்பு காணப்படுகிறது. துல்கஅதா ஐந்தாம் நாள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபிலிருந்து ஜிஃரானாவுக்கு வந்தார்கள். அங்கு அனைத்துக் கைதிகளும் போரில் கிடைத்த செல்வங்களும் சேகரிக்கப்பட்டிருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் பேரில், கைதிகளுடன் எந்த அளவு நல்ல முறையில் நடந்து கொள்ளப்பட்டது என்றால், குளிர் மற்றும் வெப்பத்தின் கடுமையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க தற்காலிகக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருந்தன.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 5,பக்கம் 640, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993-ம் ஆண்டு)

போரில் கிடைத்த செல்வங்களின் விவரம் இவ்வாறு வருகிறது; 6000 ஆண் அடிமைகள் மற்றும் பெண் அடிமைகள் இருந்தனர். சில அறிவிப்புகளில் 8000 என்றும் கூறப்படுகிறது. அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது இன்றைய போர்களைப் போல் இருக்கவில்லை. இஸ்ரேலில் தற்போது எதிரிகள் கட்டப்பட்ட வீடுகளையும் அழித்துத் தரைமட்டமாக்குகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்காகக் குடியிருப்புகளைக் கட்டினார்கள். போரில் கிடைத்த செல்வங்களில் 24000 ஒட்டகங்கள், 40000 க்கும் மேற்பட்ட ஆடுகள் மற்றும் செம்மறியாடுகள், 4000 அவ்கியா வெள்ளி அதாவது ஏறக்குறைய 490 கிலோ இருந்தன. இதற்கு முன்பு முஸ்லிம்களுக்கு இவ்வளவு அதிகமான போர்ச் செல்வம் கிடைத்ததில்லை.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களின் தர்பிய்யத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார்கள் என்றால், போரில் கிடைத்த செல்வங்களைப் பிரிப்பதற்கு முன்பு, இந்தச் செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்கு தவிர, என் உரிமையும் உங்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையைப் போன்றதே! அந்த ஐந்தில் ஒரு பங்கும் கூட இறுதியில் உங்களிடமே திரும்ப வரும்! என்று அறிவித்தார்கள். அதன்பிறகு, ஊசி மற்றும் அதன் நூல், அல்லது அதைவிடச் சிறிய பொருள் யாரிடமாவது இருந்தால், அதைத் திருப்பித் தந்துவிடுங்கள் என்று கூறினார்கள். மோசடி செய்வதிலிருந்து தவிர்ந்திருங்கள்; ஏனெனில் கியாமத் நாளில் அது மோசடி செய்தவர்களுக்கு அவமானத்தையும், ஒரு கறையையும் ஏற்படுத்தும் என்று எச்சரித்தார்கள். இந்த அறிவிப்பைக் கேட்ட ஒரு நபித்தோழர், ஒட்டக முடியால் செய்யப்பட்ட ஒரு கயிற்று உருண்டையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கிழிந்த சேணத்தைத் தைப்பதற்காக நான் இந்த நூலை போரில் கிடைத்த செல்வத்திலிருந்து எடுத்திருந்தேன் என்றார். மற்றொரு நபித்தோழர், போரில் கிடைத்த செல்வத்திலிருந்து ஓர் ஊசியை எடுத்துத் தன் மனைவிக்குக் கொடுத்திருந்தார். அவர் இந்த அறிவிப்பைக் கேட்டவுடன், உடனடியாகத் தன் மனைவியிடம் சென்று அந்த ஊசியைத் திரும்பப் பெற்று போரில் கிடைத்த செல்வத்தில் வைத்துவிட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் கிடைத்த செல்வங்களைப் பங்கிடத் தொடங்கியபோது, உள்ளங்களில் நேசத்தை ஏற்படுத்தும் வகையில் முதலில் பங்கீட்டை ஆரம்பித்தார்கள். அதாவது, அரேபியாவின் பெரிய மனிதர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் கோத்திரங்களில் மரியாதையும், பெருமையும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களை அரவணைப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்பளிப்புகளை வழங்கினார்கள். அவர்களில் சிலருக்கு நூறு ஒட்டகங்களும், சிலருக்கு ஐம்பது ஒட்டகங்களும் கொடுத்தார்கள்; இதுமட்டுமின்றி அடிமைகளும் வெள்ளியும் தனியாக இருந்தன.

ஒரு வாழ்க்கை வரலாற்று நூலில், அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் அவர்களுக்கு

நூறு ஒட்டகங்கள் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. அபூ ஸுஃப்யான் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னாருக்கு முன்னால் ஒரு வெள்ளிக் குவியல் இருப்பதைக் கண்டு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் குறைஷிகளில் மிகவும் செல்வந்தராகி விட்டீர்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்து, அபூ ஸுஃப்யான் அவர்களுக்கு நாற்பது அவ்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் கொடுக்க உத்தரவிட்டார்கள். அபூ ஸுஃப்யான், என் மகன் யஸீதுக்கும் கொடுங்கள் என்றார். அவருக்கும் நாற்பது அவ்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் கொடுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்த யஸீத், அபூ ஸுஃப்யானின் மகன் ஆவார். பொதுவாக வரலாற்றில் குறிப்பிடப்படும் அவப் பெயர் வாங்கிய யஸீத் அபூ ஸுஃப்யானின் பேரன் ஆவான். அதாவது ஹஸ்ரத் முஆவியாவின் மகன். அபூ ஸுஃப்யான் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் மற்றொரு மகன் முஆவியாவுக்கும் ஏதாவது கொடுங்கள் என்றார். அவருக்கும் நாற்பது அவ்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் கொடுக்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கு, அபூ ஸுஃப்யான் கூறினார்: என் பெற்றோர்கள் உங்களுக்கு அர்ப்பணம்! நீங்கள் கொடை வள்ளல்! நான் உங்களுடன் போரிட்டேன்; நீங்கள் எவ்வளவு ஒரு சிறந்த போர்வீரர்! பின்னர் நான் உங்களுடன் சமாதானம் செய்தேன்; நீங்கள் எவ்வளவு ஒரு சிறந்த சமாதானம் செய்பவர்! அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

(ஷரஹ் ஸர்கானீ அலா மவாஹிபுலித் துன்யா,தொகுதி4, பக்கம் 18 -19, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996-ம் ஆண்டு)

மக்காவின் கண்ணியமிக்கவர்களில் ஒருவரான ஹக்கீம் பின் ஹிஸாமும் ருந்தார். மக்கா வெற்றியின் போது அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். ஹக்கீம் பின் ஹிஸாமின் வீட்டில் நுழைபவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஹக்கீம் பின் ஹிஸாம், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் சகோதரரின் மகன் ஆவார். அவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நூறு ஒட்டகங்கள் வழங்கினார்கள். அவர் கூறுகிறார்:

நான் மேலும் நூறு கேட்டேன்; அதையும் எனக்கு வழங்கினார்கள். நான் மேலும் நூறு கேட்டேன்; அதையும் எனக்கு வழங்கினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம், ஹக்கீமே! இந்தச் செல்வம் நல்லதும், இனிமையானதும் ஆகும். எவர் இதை மனயிச்சையின்றிப் பெறுகிறாரோ அவருக்கு அதில் பரக்கத் இருக்கும். மேலும் எவர் இதை பேராசையுடன் பெறுகிறாரோ அவருக்கு அதில் பரக்கத் இருக்காது. உணவு உண்ட பிறகும் திருப்தி அடையாதவனைப் போன்றவனாவான் அவன். மேலே உள்ள கை அதாவது, கொடுக்கும் கை கீழே உள்ள கையை விட அதாவது, வாங்கும் கையை விடச் சிறந்தது என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரையின் தாக்கம் அவர் மீது எந்த அளவு ஏற்பட்டது என்றால், அவர் அப்போதே, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களை உண்மையுடன் அனுப்பியவன் மீது சத்தியமாக! இன்று முதல் மரணிக்கும் வரை நான் யாரிடமும் எதுவும் கேட்க மாட்டேன் என்றார். சில அறிவிப்புகளின்படி, அவர் கேட்ட அந்த இருநூறு ஒட்டகங்களையும் திருப்பித் தந்துவிட்டார். பின்னர் வாழ்நாள் முழுவதும் தன் வாக்குறுதியில் நிலைத்திருந்து, யாரிடமும் எதுவும் கேட்கவில்லை என்றும் தெரியவருகிறது.

ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் ஏதாவது செல்வம் கொடுத்தால் அதை வாங்க அவர் மறுத்துவிடுவார். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் செல்வத்தை கொடுக்க அவரை அழைத்தபோதும், ஹஸ்ரத் ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள். அப்போது, இஸ்லாமிய வெற்றிகளின் விளைவாக அதிக அளவில் செல்வங்கள் கிடைத்து வந்தன. கலீஃபாக்கள், ஸஹாபிகளுக்கு அந்த செல்வங்களிலிருந்து அன்பளிப்பு வழங்கி வந்தனர். ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள், அங்கிருந்த அனைவரையும் பார்த்து கூறினார்கள்: மக்களே! சாட்சியாக இருங்கள்! நான் இவருடைய உரிமையை இவருக்குக் கொடுத்தேன்; ஆனால் இவர் வாங்க மறுத்துவிட்டார்!

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ற நூல், தொகுதி 9, பக்கம் 303 - 304)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடைத்தன்மை மற்றும் அன்பளிப்பால் பயனடைந்தவர்களில், மக்காவின் தலைவர்களுள் ஒருவரான ஸஃப்வான் பின் உமைய்யாவும் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்காக யாரிடம் கவசங்களையும் ஆயுதங்களையும் கடனாக வாங்கியிருந்தார்களோ அதே ஸஃப்வான்தான் இவர். அவர் இணைவைப்பாளராக இருந்த நிலையிலேயே ஹுனைன் போரில் கலந்துகொண்டிருந்தார்.

(பாஷமைல் அவர்களின் நூல், கஸ்வா ஹுனைன், பக்கம் 273, நஃபீஸ் அகடாமி)

சில அறிவிப்புகளின்படி, முஹம்மது (ஸல்) அவர்களைக் கொல்ல வாய்ப்பு கிடைத்தால் நன்றாக இருக்கும் அல்லது எதிரிப் படை முஹம்மது (ஸல்) அவர்களின் படையைத் தோற்கடித்தால் நன்றாக இருக்கும் என்று மனதில் நினைத்துக்கொண்டு ஸஃப்வான் வந்திருந்தார். ஆனால் அதே போரிலேயே அவரது உள்ளம் மாறத் தொடங்கியது. போரில் கிடைத்த செல்வங்களைப் பங்கிடும் நேரம் வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு நூறு ஒட்டகங்கள் வழங்கினார்கள். ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின்படி, முன்னூறு ஒட்டகங்கள் வழங்கினார்கள் என்று உள்ளது.

மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பள்ளத்தாக்கை கடந்து சென்றார்கள். அது, போரில் கிடைத்த ஒட்டகங்களாலும் ஆடுகளாலும் நிறைந்திருந்தது. ஸஃப்வான் இவ்வளவு செல்வத்தை ஆச்சரியத்துடன் பார்த்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ வஹ்ப்! இந்த பள்ளத்தாக்கு உன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டதா? என்று கேட்டார்கள். அவர், ஆம் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்தச் செல்வம் முழுவதும் உனக்குரியது. நீ எடுத்துக்கொள் என்றார்கள். ஸஃப்வான் தன்னையுமறியாமல், தாங்கள் அல்லாஹ்வின் நபி என்று நான் சாட்சி கூறுகிறேன். ஏனெனில் இது போன்ற ஒரு கொடையை ஒரு நபி மட்டுமே கொடுக்க முடியும் என்றார்.

மற்றோர் அறிவிப்பில் ஸஃப்வான் பின் உமைய்யா அவர்களே கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்ந்து எனக்கு ஹுனைன் போரில் கிடைத்த செல்வங்களைக் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். அதன் விளைவாக, முன்பு படைப்புகள் அனைத்திலும் எனக்கு மிகவும் வெறுப்பான நபராக இருந்தவர், பின்னர் படைப்புகள் அனைத்திலும் எனக்கு மிகவும் பிரியமானவராக ஆகிவிட்டார்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு அரபுத் தலைவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கிக்கொண்டே இருந்தார்கள்; அவர்களின் எண்ணிக்கை ஐம்பதிற்கும் அதிகமாகக் கூறப்படுகிறது. அதன்பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித்தை மற்ற மக்களை அழைக்கச் சொல்லி அவர்களிடையே போரில் கிடைத்த செல்வங்களைப் பங்கிட்டார்கள். ஒவ்வொருவரின் பங்கிற்கும் நான்கு ஒட்டகங்கள் அல்லது நாற்பது ஆடுகள் வந்தன. இவ்வாறு, அதுவரை கிடைத்ததிலேயே அதிகபட்சமான அந்தப் போர்ச் செல்வத்தை முழுவதும் மக்களிடையே பங்கிட்டுவிட்டார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ மவாஹிபுல் லித்துன்யா, தொகுதி 4, பக்கம் 27, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1996-ம் ஆண்டு)

முஸ்லிம்கள் ஏழைகளாகவும் செல்வமற்றவர்களாகவும் இருந்ததால் போர்கள் தொடங்கப்பட்டன என்று எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் போர்கள் மீதும் குற்றம் சாட்டுகிறார்கள். இந்த வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சம் கவனிக்கத்தக்கதாக

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

உள்ளது. (எதிரிகளின்) இந்தக் கூற்றில் சிறிதளவேனும் உண்மை இருந்திருந்தால், ஹுனைன் போரில் கிடைத்த செல்வங்களின் பங்கீடு வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால், போரில் கிடைத்த செல்வங்களின் ஒரு பெரும் பகுதி உள்ளங்களை ஈர்ப்பதற்காக மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டதை இங்கு நாம் காண்கிறோம்.

(ஷிப்லீ நுஃமானீ அவர்களின் நூல், ஸீரத் அந்நபீ (ஸல்), பாகம் 1, பக்கம் 396)

குறைஷிகளின் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சில அறிவிப்புகளின்படி, செல்வம் முழுவதும் மற்றவர்களுக்கே பங்கிடப்பட்டது என்று வருகிறது. இதன் பின்னணியில் உள்ள நோக்கங்கள் எதுவாக இருந்தாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கென எதையும் வைத்துக்கொள்ளவில்லை என்பதை உலகம் கண்டது. சில அறிவிப்புகளின்படி - அதன் விவரம் பின்னர் வரும் - ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உயிர்த்தோழர்களும் நன்றியுள்ள தோழர்களுமான மதீனாவின் அன்சாரிகளுக்குக் கூட அந்தப் போர்ச் செல்வத்திலிருந்து எதையும் கொடுக்கவில்லை என்று தெரியவருகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (தாம்) குறைஷிகளுக்குச் செல்வத்தை கொடுத்ததன் ஞானத்தை விவரித்தவாறு கூறும்போது,

إِنِّي أُعْطِي قُرَيْشًا أَتَأَلَّفُهُمْ، لِأَنَّهُمْ حَدِيثُ عَهْدٍ بِجَاهِلِيَّةٍ

என்று கூறினார்கள். அதாவது, நான் குறைஷியருடன் நேசத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்குக் கொடுக்கிறேன். ஏனெனில், அவர்கள் குஃப்ரை விட்டு விலகி நீண்ட காலம் ஆகவில்லை; ஈமான் அவ்வளவு வலுவாக இல்லை! என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் கம்ஸ், ஹதீஸ் எண்: 3146)

புஹாரீயின் இவ்வாறு மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ قُرَيْشًا حَدِيثُ عَهْدٍ بِجَاهِلِيَّةٍ
وَمُصِيبَةٍ وَإِنِّي أَرَدْتُ أَنْ أَجْبُرَهُمْ وَأَتَأَلَّفَهُمْ

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4334)

குறைஷிகளின் இறைமறுப்பு, அழிவு மற்றும் நாசத்தின் காலம் தற்போதுதான் கடந்து சென்றுள்ளது. என் நோக்கம் அவர்களின் இழப்பை ஈடு செய்வதும், அவர்களின் உள்ளங்களை ஆறுதல்படுத்துவதும் ஆகும்.

இந்த ஞானமிக்க பங்கீடு மற்றும் அன்பளிப்பின் அருளுக்குரிய விளைவுகள் எப்படி வெளிப்பட்டனவென்றால், அன்னாருடைய இரத்தத்தை குடிக்க தாகித்திருந்தவர்களுக்கு இப்போது உலகிலேயே மிகவும் மேன்மையானவராகவும் பிரியமானவராகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆகியிருந்தார்கள். முன்பு இஸ்லாத்தை அழிக்கத் தங்கள் உயிரைப் பணயம் வைத்தவர்கள், இப்போது இஸ்லாத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பாதுகாக்கத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாரானார்கள். அவர்களில் பலர் பின்னர் இஸ்லாமியப் போர்களில் ஷஹாதத் நிலையை அடைந்தனர். அவர்களின் இஸ்லாம் சிறந்த இஸ்லாமாக நிரூபணமானது.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ற நூல், தொகுதி 9, பக்கம் 298 - 299)

இந்தச் சந்தர்ப்பத்தில், சில நயவஞ்சகர்கள் செல்வப் பங்கீட்டில் ஆட்சேபனை தெரிவித்து அவமரியாதையாகவும் கண்ணியக்குறைவாகவும் நடந்துகொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நஊதுபில்லாஹ்! நீதி நேர்மையுடன் செயல்படவில்லை என்றும், அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப செயல்படவில்லை என்றும் குற்றம் சாட்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கேள்விப்பட்டபோது அன்னாருடைய அருளுக்குரிய முகம் சிவந்துவிட்டது. அல்லாஹ்வும், அவனது தூதரும் நீதியுடன் செயல்படவில்லை என்றால் பின்னர் வேறு யார் நீதியுடன் நடந்து கொள்வார்? என்று கேட்டார்கள். பின்னர், அல்லாஹ் என் சகோதரர் மூஸா மீது கருணை புரிவானாக! அவருக்கு இதைவிடப் பெரிய துன்பங்களும், வேதனைகளும் அளிக்கப்பட்டன; அவர் பொறுமையைக் கையாண்டார் என்றார்கள்.

இதேபோல், ஸூல்குவைஸிரா என்ற பெயருடைய மற்றொரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கருகில் நின்று, முஹம்மது (ஸல்) அவர்களே! இன்று நீங்கள் செய்ததை நான் பார்த்தேன் என்றார். சரி! நீ என்ன பார்த்தாய்? என்று அன்னார் கேட்டார்கள். அவர், நீங்கள் நீதியுடன் செயல்படவில்லை என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உனக்குக் கேடு உண்டாகட்டும்! என்னிடம் நீதி இல்லையென்றால், வேறு யாரிடம் இருக்கிறது? என்றார்கள். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, அனுமதித்தால், இவனது கழுத்தைத் துண்டித்து விடுகிறோம் என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வேண்டாம்! ஒருவேளை இந்த நபர் தொழுகையாளியாக இருக்கலாம் என்றார்கள்.

இதுவும் உறுதியான விஷயம் அல்ல! ஆனால் ஒருவேளை இவன் தொழுகையாளியாக இருக்கலாம் என்று அன்னாருக்குச் சந்தேகம் இருந்தது. எனவே, இவனது கழுத்தை வெட்டுங்கள் என்று நான் எப்படிச் சொல்ல முடியும் என்றார்கள்.

(இதற்கெதிரில்) இன்றைய முஸ்லிம்களின் செயல்கள் எவ்வாறு உள்ளன? என்று பாருங்கள்!

அதற்கு, ஒரு தொழுகையாளி தன் உள்ளத்தில் இல்லாத ஒரு விஷயத்தைப் பேச முடியுமா? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், காலிதே! மக்களின் உள்ளங்களைப் பிளந்து அல்லது நெஞ்சத்தை திறந்து பார்க்க எனக்குக் கட்டளையிடப்படவில்லை என்றார்கள்.

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இந்த நபரும் அவனது கூட்டாளிகளும் திருக்குர்ஆனை ஓதுவார்கள்; ஆனால் அது அவர்களின் தொண்டைக்குக் கீழே இறங்காது. அவர்களின் ஈமான் மேலோட்டமான ஈமானாக இருக்கும். வேட்டையாடப்பட்ட மிருகத்திலிருந்து அம்பு இரத்தக்கறை சிறிதும் இல்லாமல் மறுபுறம் செல்வது போல், அவர்கள் மார்க்கத்திலிருந்து வெளியேறிவிடுவார்கள். அவர்களின் தொழுகை மற்றும் நோன்புடன் ஒப்பிடும்போது, உங்கள் தொழுகையையும் நோன்பையும் நீங்கள் அற்பமாகக் கருதுவீர்கள். அதாவது, அவர்கள் வெளிப்படையில் நீண்ட, நெடிய நேரம் தொழுவார்கள்; முறையாக தொழுகைகளைத் தொழுபவர்களாகவும், நோன்பு நோற்பதில் கடுமை காட்டுபவர்களாகவும் இருப்பார்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 5, பக்கம் 404 - 405, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

இன்று நாம் பல முஸ்லிம்களின் செயல்கள் இவ்வாறே இருப்பதைக் காண்கிறோம். குறிப்பாக ஆலிம்கள் என்று அழைக்கப்படுபவர்களின் செயல்கள். அன்னார் (ஸல்) இதை முன்பே முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். குழப்பத்தை ஏற்படுத்திய கவாரிஜ்களின் தோற்றுனர்களில் இந்த நபரும் ஒருவரானார் என்றும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் காலத்தில் இந்தக் கூட்டம் வெளிப்பட்டது என்றும், பின்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அம்மக்களுக்கு எதிராக ஜிஹாத் செய்தார்கள் என்றும் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களைக் குறித்து என்னவெல்லாம் கூறினார்களோ அவ்வாறே இவர்கள் ஆனார்கள்.

(உம்தத்துல் காரீ, தொகுதி 15, பக்கம் 345,தாரே அஹ்யாஉத் தராஸ், 2003-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஸூல்குவைஸிரா என்ற பெயர் கொண்ட ஒருவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முஹம்மது (ஸல்) அவர்களே! இன்று நீங்கள் செய்ததை நான் பார்த்தேன் என்றான். நீ என்ன பார்த்தாய்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நீங்கள் இன்று அநீதி இழைத்தீர்கள்; நீதியுடன் செயல்படவில்லை என்று அவன் கூறினான். நஊதுபில்லாஹ்!

உன் மீது பரிதாபமே! நான் நீதியை நிலை நாட்டவில்லை என்றால், உலகில் வேறு எந்த மனிதன் நீதியை நிலை நாட்டுவான்? என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் ஆவேசத்தில் எழுந்து நின்றனர். அந்த நபர் பள்ளிவாசலை விட்டு வெளியேறியபோது, அவர்களில் சிலர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த நபர் கொல்லப்பட

வேண்டியவர்; நாங்கள் அவனைக் கொல்ல தாங்கள் அனுமதி தருகிறீர்களா? என்று கேட்டனர்.'

தற்காலத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை அவமதிப்பத்தைப் பற்றிப் பெரிய பேச்சுகள் பேசுபவர்கள் இதையும் பார்க்க வேண்டும்.

' இந்த நபர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தால், நாம் அவனை எப்படி கொல்ல முடியும்?என்று அன்னார் கூறினார்கள். அதாவது, நம்முடைய விதிகள் மற்றும் சட்டங்களுக்கு அவன் கட்டுப்பட்டு நடக்கிறான் என்றால், சரி; அவனைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை என்றார்கள். நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! ஒரு நபர் வெளிப்படையாக ஒன்றும் உள்ளத்தில் வேறு ஒன்றும் வைத்திருந்தால், அத்தகைய நபர் தண்டனைக்குரியவர் இல்லையா? என்று கேட்டனர். மக்களின் உள்ளங்களில் உள்ள எண்ணங்களுக்கு ஏற்ப நான் அவர்களிடம் நடந்துகொள்ளும்படி அல்லாஹ் எனக்குக் கட்டளையிடவில்லை; மக்களின் வெளிப்படையான செயல்களுக்கு ஏற்ப நான் அவர்களிடம் நடந்துகொள்ளும்படியே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், இவனும் இவனது தோழர்களும் ஒருநாள் இஸ்லாத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள் என்றார்கள். ஆம்! இப்போது நான் எந்த தண்டனையும் கொடுக்கவில்லைதான். ஆனால் அவர்கள் கிளர்ச்சி செய்தால், அதற்கான விளைவையும் சந்திப்பார்கள் என்றார்கள்.

அவ்வாறே, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் காலத்தில், இந்த நபரும் அவனது கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் ஹஸ்ரத் அலீயிடம் கிளர்ச்சி செய்த கிளர்ச்சியாளர்களின் தலைவர்களாக இருந்தனர். அவர்கள் 'கவாரிஜ்கள்' என்ற பெயரில் இன்றுவரை அறியப்படுகிறார்கள்.

(தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 358)

மீதமுள்ளவை, இன்ஷா அல்லாஹ், இனி வரும் காலத்தில் கூறப்படும்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், அக்டோபர் 10, 2025, பக்கம் 2-7)

தமிழாக்கம்

முரப்பி A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்.....)**

ஆடு களத்திற்கு சென்று விட்டார்கள்; தந்தையே! தாங்கள் ஏன் கிரிக்கெட் விளையாட செல்லவில்லை? என்று ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் ஒரு புதல்வர் அப்பாவித்தனமாக அன்னாரிடம் கேட்டார்கள்.

அன்னார் (அலை) அந்நேரத்தில் சூரா ஃபாத்திஹாவின் தஃப்ஸீர் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

"இவர்களோ விளையாடி விட்டு திரும்பி வந்து விடுவார்கள்: ஆனால் நான் எத்தகைய கிரிக்கெட் விளையாடுகிறேன் என்றால் அது கியாமத் வரை நிலை பெற்றிருக்கும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 93-94, 2018-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்.....)**

சில நாள் வாழ்க்கையை நல்ல சந்தோஷமாகவும், சுகமாகவும் வாழ்ந்து கழித்து விட வேண்டும்; நமது வேலை இது இவ்வளவு தான் என்று அவர்கள் எண்ணுகின்றனர். அல்லாஹ்வின் நபிமார்கள் அவர்களிடத்தில் இறைவனுடைய தூதுச் செய்தியை எடுத்துக்கொண்டு வருகின்றபோது, அந்த மக்களின் கொள்கைகள் மற்றும் செயல்களில் ஒரு மகத்தான மாற்றத்தை நபிமார்கள் உருவாக்க விரும்புகின்றனர். எனவே அந்த மக்களுக்கு ஒரு தடுமாற்றம் ஏற்படுகின்றது. மேலும் அவர்கள் இவ்வாறு கூச்சலிடத் தொடங்கி விடுகின்றனர். அதாவது நீங்கள் ஏன் எங்களை அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அச்சமூட்டிகின்றீர்கள்? நாங்கள் மரணித்த பிறகு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதோ எங்களின் கொள்கை கிடையாது: எனவே நாங்கள் ஒருவருக்கு பதில் அளிக்க வேண்டுமே என்ற எந்த ஆபத்தும் எங்களுக்கு ஏற்பட முடியாது; நாங்கள் என்ன செயல்களை செய்வோமோ அதனை எங்களது இந்த சில நாள் வாழ்க்கைக்காகவே செய்வோம்; மேலும் நாங்கள் எங்களது நலன் மற்றும் பாதிப்பை புரிந்து கொள்வதற்கு நல்ல ஆற்றல் படைத்திருக்கின்றோம்; எனவே நீங்கள் எங்களை மறுமைநாளின் தண்டனை குறித்து எங்களை அச்சுறுத்தாதீர்கள்.

உண்மை இதுவே ஆகும். அதாவது மரணத்திற்குப் பிறகு எழுப்பப்படுதல் என்ற விஷயத்தின் மீது நம்பிக்கை கொள்கின்ற ஒரு விஷயம் எப்படிப்பட்டது என்றால் அது மனிதனிடம் அல்லாஹ்வின் மீதான அச்சத்தையும், அவன் மீதான நேசத்தையும் உருவாக்கி விடுகின்றது. மேலும் அவனது செயல் சீர்திருத்தத்திற்கான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வழிமுறையாகும்.

மறுமை வாழ்க்கை குறித்த நம்பிக்கை இல்லாமல் போனால், பின்னர் இந்த அகில உலகின் இயக்கத்தையும் வீணான மற்றும் பயனற்ற ஒரு விஷயமாக ஒப்புக்கொள்ள நேரிடும். அது மட்டுமல்ல, இன்னும் கூறப்போனால் நன்மை மற்றும் இறையச்சத்தில் முன்னேறுவதும் ஒரு வீணான செயலாக கருதப்படும். ஆனால் இந்த எண்ணம் அதாவது அல்லாஹ் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், மேலும் வானம் மற்றும் பூமிக்கிடையில் ஆயிரக்கணக்கான பொருட்களை படைத்து, மேலும் அவற்றில் தனது வல்லமைக்கான ஆயிரக்கணக்கான இரகசியங்களை வைத்து எப்படிப்பட்ட ஒரு மனிதரை படைத்தான் என்றால் அவன் சில காலம் வாழ்ந்து விட்டு பின்னர் நிரந்தரமாக மறைந்து விடுவான்: மேலும் அவரது வாழ்க்கைக்கு எந்தவொரு முக்கிய நோக்கமும் கிடையாது என்பதாக அமையும். இது எப்படிப்பட்ட ஒரு சிந்தனை என்றால் இதனை எந்தவொரு பகுத்தறிவும் ஒப்புக் கொள்ளாது. மனிதனுக்காக இந்த அளவு பரந்துபட்ட பிரபஞ்சத்தை படைப்பதும் , மேலும் அதில் அறிவின் மூலமாக மனிதனுக்கு ஆளுமையை வழங்குவதும் இந்த விஷயத்தை எடுத்துக்கின்றது. அதாவது அவனுக்கு இந்த குறுகிய வாழ்க்கை மட்டுமின்றி வேறொரு நோக்கமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று இஸ்லாம் கூறுகிறது.

(மனிதனாகிய) அவன் ஒரு நிரந்தர வாழ்விற்காக படைக்கப்பட்டுள்ளான் ; மேலும் நிரந்தர ஆன்மிக முன்னேற்றங்களுக்கான வழிப்பாதை அவனுக்காக திறக்கப்பட்டுள்ளது என்றும் இஸ்லாம் கூறுகிறது.

எனவே மரணம் என்பதற்கு "மனிதனின் ஆன்மா அவனது உடலிலிருந்து பிரிந்து விட்டது'' என்று மட்டுமே பொருள்படுகின்றது. ஏனெனில் ஆன்மாவிற்கு எந்த அழிவுமில்லை. மேலும் அது எப்போதும் உயிருடன் இருக்கும். மேலும் அல்லாஹ்விடத்தில் எல்லையற்ற முன்னேற்றங்களை பெற்றுக் கொண்டிருக்கும். எவ்வாறாயினும் நபிமார்களை நிராகரிப்பதற்கான ஒரு பெரிய காரணம் என்பது மரணத்திற்கு பிறகுள்ள வாழ்வை மறுப்பதும் ஆகும். அதன் பக்கம் இந்த வசனங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

( தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 171,

* * * * * * * *

**12-ம் பக்கத் தொடர்ச்சி (ஹுஸூர் அன்வர் அவர்களின் அமெரிக்க சுற்றுப் பயணம் - 2012.....)**

உலகம் எல்லா வகையான அழிவுகளில் இருந்தும் அபாயங்களிலிருந்தும் பாதுகாப்பாகிவிட வேண்டும். மேலும் அதற்காக முயற்சி செய்தவாறு நாம் துஆ மட்டுமே செய்ய முடியும். மேலும் ஒவ்வொருவருக்கும் உண்மையை தெரியப்படுத்த வேண்டும். எதிர்கால சந்ததிகள் நம்மை குற்றவாளிகளாக கருதி விடாமல் இருப்பதற்காகவும், மேலும் நம்மை ஏளனத்துடன் பார்க்காமல் இருப்பதற்காகவும் நாம் இவ்வாறு செய்வது நமக்கு அவசியமாகும்.

நிறைவாக, ஒரு முறை நான் மீண்டும் உங்கள் அனைவருக்கும் நன்றி செலுத்த விரும்புகின்றேன்; நீங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக முயற்சி செய்தீர்கள்; மேலும் அதற்காக நேரத்தை ஒதுக்கினீர்கள்; அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் தனது அருளை புரிவானாக!

ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்த சொற்பொழிவை 7:47 மணி வரை தொடர்ந்திருந்தார்கள்.

நிறைவாக ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்து வைத்தார்கள். இதன்பிறகு உணவு பரிமாறப்பட்டது. விருந்திற்கு பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் அங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு சந்திப்பிற்கான வாய்ப்பை வழங்கினார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். அனைத்து விருந்தினர்களும் ஒரு வரிசையில் நின்று ஹுஸூர் அன்வர் அவர்களுன் கைகுலுக்க கூடிய பாக்கியம் பெற்றார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் விருந்தினர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். மேலும் விருந்தினர்கள் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள்.(**தொடரும்**...)

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் அக்டோபர் 18 2013 ஆம் ஆண்டு) தமிழாக்கம்

முரப்பி

A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சிங்கப்பூர் சுற்றுப் பயணம் - 2013**

எங்கு திருக்குர்ஆனில் இஸ்லாமிய போதனைகள் முஸ்லிம்களுக்கு இறைவனுடைய உரிமைகளை செலுத்துவது தொடர்பாக கட்டளை வழங்குகின்றதோ அங்கு நமக்கு இறைவனுடைய படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கும் இஸ்லாமிய போதனை கட்டளை வழங்கியுள்ளது

இஸ்லாம் உலகிற்கு ஆன்மீக மற்றும் நல்லொழுக்க போதனைகளை வழங்குகின்றது. மேலும் அவற்றில் உயர்ந்த தரத்தை அடைவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது

**(அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர், அடிஷனல் வக்கீலுத் தப்ஷீர், லண்டன்)**

**வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் அன்வர் அவர்களின் உரை**

தஷஹ்ஹுது மற்றும் தஅவ்வுது ஓதிய பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

முதலில், எங்களது அழைப்பை ஏற்றுக் கொண்டதற்காகவும், இங்கு வருகை தந்ததற்காகவும் நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஒரு நாட்டின் அதிபரையோ அல்லது ஒரு பிரபலமான அறிவியல் அறிஞரையோ விஞ்ஞானியையோ அல்லது மிகவும் சிறந்த பொருளாதார நிபுணர்களையோ அல்லது மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல்வாதியையோ வரவேற்பதற்காக நீங்கள் வருகை தரவில்லை. மாறாக, நீங்கள் எப்படிப்பட்ட ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் வருகை தந்துள்ளீர்கள் என்றால் அது ஒரு மார்க்க ஜமாஅத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடனோ அல்லது எங்களது மார்க்கத்துடனோ தொடர்பில்லை. ஆனால், அவ்வாறிருந்தும் நீங்கள் இங்கு வருகை தந்துள்ளீர்கள். இது நிச்சயமாக உங்கள் புறமிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள பெருந்தன்மை மற்றும் உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடாகும்.

ஓர் உலகியல் தலைவருடன் தொடர்புகள் வைப்பது என்பது உலகியல் தொடர்புகளை அதிகரிப்பதற்கு ஒரு வழிமுறையாக அமைகின்றது. ஓர் அறிவியல் தளத்தில் கலந்து கொண்டு மனிதன் அறிவியல் முன்னேற்றங்களை குறித்து அறிந்து கொள்கின்றார். அதே நேரம் ஒரு மார்க்க அறிஞருடனான நட்பின் மூலம் அறிவை அதிகரித்துக் கொள்வதற்கு அது காரணியாக அமைகின்றது. மேலும் இன்றைய நாட்களில் பொருளாதார நிபுணர்களின் கருத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஏனென்றால் கடந்த சில வருடங்களாக பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையை அடைவதற்கு தொடர்ந்து முயற்சிகள் செய்யப்படுகின்றன என்பது உண்மை என்ற போதிலும் பொருளாதார நெருக்கடி முழு உலகையும் சூழ்ந்துள்ளது.

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு நாடாக இருந்த போதிலும் அதுவும் உலகின் பொருளாதாரம் முன்னேற்றத்திற்காக தனது ஒரு பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது. நீங்கள் அனைவரும் அதற்காக தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. மேலும் இதன் காரணமாக உங்களுடைய பொருளாதார நிபுணர்கள் அல்லது விமர்சகர்களின் புறமிருந்து வரக்கூடிய புதிய கருத்துக்கள் மற்றும் பார்வைகளின் மீதும் உங்களுக்கு சிறப்பு ஆர்வம் இருக்கும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

அரசியல் ரீதியாகவும் நாம் பார்க்கின்றோம். அதாவது அரசாங்கங்களும், உலகளாவிய செயல் திட்டங்களும் அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கின்றன. எனவே மக்கள் அரசியல்வாதிகளின் கருத்துகளை கேட்பதற்கும், புத்தம் புதிய அரசியல் மாற்றங்களுடன் பயணிப்பதற்கும் சிறப்பு ஆர்வம் கொண்டிருக்கின்றனர். ஆனால், மார்க்கத் தொடர்பை பொருத்த வரையிலோ உலகம் மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எதுவரை என்றால், மார்க்க விவகாரங்களில் ஆர்வம் கொண்டவர்களும் அல்லது தங்களை மார்க்கவாதியாக கூறிக் கொள்பவர்களும் கூட உலகியல் விவகாரங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

அதாவது எல்லா ரீதியிலும் மார்க்கத்தை இரண்டாம்பட்சமாகவே வைக்கின்றனர். இந்த அனைத்து விஷயங்களையும் கருத்தில் கொண்டவாறு எனது எண்ணம் இதுவாகும். அதாவது ஒரு மார்க்க ஜமாஅத்தின் உலகளாவியத் தலைவரின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நீங்கள் இங்கு வந்திருப்பது என்பது உங்களுடைய சகிப்புத்தன்மை மற்றும் மன தைரியத்திற்கான ஒரு தெளிவான சான்றாகும்.

எனவே நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கவில்லை என்றால் அது தவறாக அமையும். ஏனெனில் அந்நிலையில் ஒரு பக்கம் நான் அடிப்படை நல்லொழுக்க நெறிமுறைகளிலிருந்து விலகிச் சென்று விடுவேன்; மற்றொரு பக்கம் நான் எனது மார்க்க போதனைகளையும் புறக்கணிக்கக் கூடியவனாக இருப்பேன். ஏனெனில் இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு கற்றுத் தந்துள்ளார்கள். அதாவது மக்களுக்கு நன்றி செலுத்தாத நபர் தன்னை படைத்தவனுக்கும் நன்றி செலுத்துவதில்லை.

எனவே இந்த நன்றியுணர்வுகள் இல்லை என்றால் பின்னர் எல்லா வகையான மார்க்க இறை வணக்கங்களும், வீணானதும், பயனற்றதும் ஆகும்.

இந்த சுருக்கமான அறிமுகம் மற்றும் நன்றி செலுத்துதல் ஆகியவற்றிற்கு பிறகு நான் எனது மார்க்க போதனைகள் தொடர்பாக சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றேன்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாம் உலகிற்கு ஆன்மீக மற்றும் நல்லொழுக்க போதனைகளை வழங்குகின்றது. மேலும் அவற்றில் உயர்ந்த தரத்தை அடைவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது. ஆன்மீக போதனைகள் மட்டுமின்றி நமக்கு சமூகத்தில் வாழ்வதற்கான வழிமுறை மற்றும் சமூக வாழ்வியல் முறை தொடர்பான முழுமையான ஒழுக்க நெறிமுறைகளையும் இஸ்லாம் வழங்குகின்றது.

அடிப்படையான குடும்பத் தொடர்புகள் முதல் உலகளாவிய தொடர்புகள் வரை எல்லா மட்டத்திலான தொடர்புகளையும் நிலைத்திருக்க செய்வது தொடர்பான விரிவான வழிகாட்டல்களை இஸ்லாம் நமக்கு வழங்கியுள்ளது. மேலும் இஸ்லாம் நமக்கு இந்த விஷயத்தையும் கற்றுத் தந்துள்ளது. அதாவது நாம் நமது சமூக மற்றும் பொருளாதார விவகாரங்களில் எவ்வாறு நடக்க வேண்டும்? மேலும் ஓர் உண்மையான முஸ்லிமிற்கு, பொருளாதார விவகாரங்களில் பொருளாதார பொறுப்புகள் தொடர்பாகவும் கூறியிருக்கின்றது.

எங்கு திருக்குர்ஆனில் இஸ்லாமிய போதனைகள் முஸ்லிம்களுக்கு இறைவனுடைய உரிமைகளை செலுத்துவது தொடர்பாக கட்டளை வழங்குகின்றதோ அங்கு நமக்கு இறைவனுடைய படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கும் இஸ்லாமிய போதனை கட்டளை வழங்கியுள்ளது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இந்த தலைப்பும், இஸ்லாத்தின் இந்த போதனைகளும் எந்த அளவிற்கு பரந்துபட்டதாக இருக்கின்றன என்றால் இன்று இவை அனைத்தையும் விவாதத்தில் கொண்டு வருவது என்பது எனக்கு சாத்தியமற்றதாகும். எனவே நான் இஸ்லாம் கூறியிருக்கின்ற சமூக அமைப்பின் ஒரு பகுதி தொடர்பாகவே உரையாற்றுவேன். மேலும், நான் அது தொடர்பான ஒரு சில கருத்துக்களை எடுத்துரைப்பேன். அவை இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் பொருளாதாரத்தின் அடிப்படை விதிமுறைகளை தெளிவுபடுத்தக் கூடியதாக இருக்கும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள்

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

கூறினார்கள்:

இன்றைய காலத்தில் உலகின் பெரும்பான்மையான பகுதியில் இஸ்லாம் என்பது தீவிரவாத மார்க்கமாகும் என்ற இந்த (தவறான) சிந்தனையும், எண்ணமும் காணப்படுகின்றது. எனவே நான் இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பை எடுத்துரைக்கின்ற போது அல்லாஹ்வின் பெயராலும், மறைவான நோக்கங்களை பெறுவதற்காகவும் இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு பலவந்தத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற சிந்தனை ஏராளமானவர்களுக்கு தோன்றக் கூடும். எனவே முதலில் நான் இதனை தெளிவு படுத்திவிடுகின்றேன். இந்த எண்ணம் முற்றிலும் தவறாகும். மேலும் உண்மை என்பது முற்றிலும் இதற்கு எதிரானதாகும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இந்த தவறான சிந்தனைகளானது இந்தக் காரணத்தால் நிறுவப்பட்டுள்ளன. அதாவது முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கை திருக்குர்ஆனின் அசல் போதனைகளை புரியவில்லை. அதன் காரணமாக அவர்கள் முஸ்லிம்கள் அல்லாத உலகின் முன்னால் இஸ்லாத்தின் தவறான சித்திரத்தை எடுத்து வைத்துள்ளார்கள்; மேலும் அதனை முன்னிறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் மிகவும் வேதனையுடன் இதனை கூற நேரிடுகின்றது: அதாவது உண்மையில் சில எப்படிப்பட்ட சுயநலம் கொண்ட முஸ்லிம்கள் இருக்கின்றனர் என்றால் அவர்கள் தங்களது நலனை மட்டுமே சிந்திக்கின்றனர்; அவர்கள் தங்களது ஆசைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காக இஸ்லாத்தின் போதனைகளை முற்றிலும் தவறான வடிவில் எடுத்துரைக்கின்றார்கள். அதன் காரணமாக இஸ்லாத்தின் மீது ஏராளமான அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அவர்களின் இந்த செயல்கள் ஆகுமற்ற முறையில் இஸ்லாத்தின் உண்மையான பெயருக்கு களங்கம் விளைவிக்குகின்றன. ஆனால் அதே நேரம் உண்மை இதுவாகும். அதாவது இஸ்லாம் எல்லா சந்தர்ப்பத்திலும் பகுத்தறிவு மற்றும் ஆதாரப்பூர்வமான பதிலை வழங்குகின்றது. அது முற்றிலும் தெளிவானதாகவும், நீதியை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கின்றது. உண்மையில் இஸ்லாமோ இதனை கற்றுத் தருகின்றது. அதாவது மற்ற விவகாரங்களைப் போன்று பொருளாதார விவகாரங்களும் நுட்பமான ஞானம் மற்றும் முழுமையான கவனத்துடன் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று அது நமக்கு போதிக்கின்றது.

திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ள ஒரு அடிப்படை வழிமுறையை நான் எடுத்துரைக்கின்றேன்.

அல்லாஹ் கூறுகின்றான் :

. هُوَ الَّذِيۡ خَلَقَ لَكُمۡ مَّا فِى الۡاَرۡضِ جَمِيۡعًا

(சூரா பக்கரா: வசனம் 30)

உங்களுக்காக பூமியிலுள்ள எல்லாவற்றையும் படைத்த அவனே இறைவன் ஆவான்.

அதாவது திருக்குர்ஆன் கூறுகின்றது. உலகில் இருக்கின்ற ஒவ்வொரு பொருளும் மனித குலத்தின் நன்மைக்காக படைக்கப்பட்டுள்ளது. அடிப்படையில் ஏதாவது ஒரு நாட்டிற்கு இயற்கை வளங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்றால் அந்த வளங்கள் அந்த சமுதாய மக்களின் பயனுக்காகவே ஆகும்.

இஸ்லாம் இவ்வாறு கூறி நாம் நமது அண்டை அய்லாரை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற விஷயத்தை தெளிவுபடுத்தியுள்ளது.

அண்டை அயலாரின் விளக்கமாக திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ளதற்கு ஏற்ப உங்களுடைய வீட்டிற்கு அருகில் இருப்பவர், உங்களுடன் பணி செய்யக்கூடியவர், உங்களுடன் பயணம் செய்யக்கூடிய நபர் ஆகியோரும் அண்டை அயலார் ஆவர். எந்த அளவுக்கு என்றால் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப உங்களது வீட்டின் நான்கு சுவர்களில் அமைந்துள்ள 40 வீடுகள் வரை இருப்பவர் அண்டை அயலார் என்ற வட்டத்தில் வருவர். பின்னர் இதனை அருகிலுள்ள நகரம் மற்றும் நாடுகள் வரை கொண்டு செல்ல முடியும். இந்த அயலுறவு என்பது எந்த அளவுக்கு பரந்தப்பட்டது என்பதை ஒவ்வொரு நபராலும் கண்டு கொள்ள முடியும்.

**ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:**

எங்கு ஒரு சமுதாயம் தங்களுக்கு அல்லாஹ் அருளியுள்ள வளங்களிலிருந்து பயன்பெறுகின்றதோ அங்கு அந்த சமுதாயம் தனது செல்வத்தை ஏழை மற்றும் தேவையுடைய நாடுகளின் மக்களுக்கு உதவி செய்வதற்காகவும் பயன்படுத்த வேண்டும். இந்த செல்வம் நீதியான வழிமுறைகளில் எந்த பேதமும் இன்றி, எந்த பேராசையும் இன்றி அல்லது எவ்வித சுயநலமும் இன்றி பயன்படுத்தப்பட வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

நாம் பூமியைப் பார்க்கின்ற போது அல்லாஹ் அதனை எந்த அளவிற்கு பல்வேறு வகையான இயற்கை வளங்களால் நிறைத்துள்ளான் என்ற விஷயம் நமக்கு தெரிய வருகிறது. மேலும் அதிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு பொருளும் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, நமக்கு இந்த விஷயம் தெரியும். அதாவது பொருளாதார முன்னேற்றத்தில் மலைகளும் ஒரு பயனுள்ள பங்களிப்பை செய்கின்றன. அடுத்து, ஏராளமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. உதாரணமாக விலைமதிப்பற்ற ஆபரணங்களும், மண்ணுக்கு கீழே புதைந்து கிடக்கும் கனிம வளங்களும் காணப்படுகின்றன, இது மட்டுமின்றி உலகின் ஏராளமான பகுதிகளில் எண்ணெய் கிணறுகள் இருக்கின்றன. அது தொடர்ந்து எல்லையற்ற செல்வங்களை வழங்குகின்றன- அடுத்து, ஓடும் நதிகள் இருக்கின்றன. மேலும் நிச்சயமாக தண்ணீர் ஓர் அத்தியாவசிய தேவையாகும். எப்போதும் அதற்கான கோரிக்கை இருக்கின்றது. உலகின் சில பகுதிகளில் உண்மையில் கடும் தண்ணீர் தட்டுப்பாடு என்பது அனுதினமும் அபாயகரமான மற்றும் நிராசையடைய செய்கின்ற விவகாரமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எவ்வாறாயினும் இவையோ அல்லாஹ் முழு உலகிற்கும் அருளியுள்ள அந்த இயற்கை வளங்களின் ஒரு சில உதாரணங்களே ஆகும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இந்த அனைத்து வளங்களும் முழு மனிதகுலத்திற்குரிய செல்வமாகும். அதாவது இந்த அனைத்து அருட்கொடைகளும் எல்லா மக்களுக்கும் உரியதாகும். மேலும் ஒவ்வொருவரும் இதிலிருந்து பயன்பெற வேண்டும். பூமியின் மேலேயும், பூமியின் கீழேயும் பரந்துப்பட்ட கருவூலங்கள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ் வழங்கியிருக்கின்றான். அவை ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரியதல்ல; மாறாக உலகிலுள்ள எல்லா பகுதிகளிலும் உள்ள எல்லா மனிதர்களின் நலனுக்காகவே ஆகும். சில மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தங்களது திறமைகள் மூலமாக இந்த அருட்கொடைகளை பயன்படுத்துவதற்கு தகுதியானவையாக ஆக்கிக் கொள்கின்றனர். இதில் எவ்வித ஐயமும் இல்லை; மேலும் இந்த பொருளிலிருந்து அவர்களுக்கும் பயன் கிடைக்க வேண்டும். அறிவியல் அறிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இது போன்ற வளங்களை கண்டறிவதற்காக புதுப்புது வழிமுறைகளை கண்டுபிடிக்கின்றனர். மேலும் இந்த இயற்கை வளங்களை நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக பல்வேறு வகையான எந்திரங்களையும், கருவிகளையும் உருவாக்குகின்றார்கள். அவர்களின் இந்த முயற்சிகளின் விளைவாக அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கின்றது என்பதிலும் எவ்வித ஐயமுமில்லை; இதே போன்று பொறியாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உயர் கல்வியை பயின்ற பிறகு பல்வேறு வகையான திறமைகளை பெறுகின்றனர். மேலும் இந்த இயற்கை வளங்களின் மேம்பாட்டிற்காக பணி செய்கின்றனர். அவர்களுக்கும் பயன் கிடைக்க வேண்டும். மேலும், இன்னும் பல்வேறு துறைகளின் நிபுணர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இவற்றின் பங்கு கிடைக்க வேண்டும். ஆனால் அத்துடன் இந்த விஷயத்தையும் உறுதியாக விளங்கிக் கொள்ள





வேண்டும். அதாவது எந்த ஒரு நபருக்கும் அல்லது கூட்டத்திற்கும் ஒரு சாதாரண ஊழியர் அல்லது தொழிலாளிக்கு அவருடைய பங்கை கொடுப்பதிலிருந்து நிராகரிக்கும் உரிமை கிடையாது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

தற்போது உலகம் எந்த நிலைமைகளை எதிர்கொண்டுள்ளதோ அதில் இந்த பொறுப்பு அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதாவது அதுபோன்ற பணி செய்யக்கூடியவர்களுக்கு உரிய ஊதியத்தை வழங்க வேண்டும். மேலும் முடிந்தவரை பணி செய்யக்கூடியவர்களுக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் செல்வந்தர் மற்றும் ஏழைகளுக்கு இடையிலான இடைவெளி முடிந்தவரை குறையும்.

இதுபோன்ற வசதிகளையும், உழைப்பிற்கான உரிமைகளையும் வழங்குவது என்பது அந்த பணிகளில் அமர்த்துகின்ற பணக்கார கம்பெனிகள் அல்லது அந்த நிறுவனங்களின் பொறுப்புமாகும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

செல்வந்தர்களின் செல்வத்தை அவரிடமிருந்து பலவந்தமாக அபகரித்துக் கொள்ள வேண்டும்; மேலும் அவர்கள் தமது அடிப்படை தேவைகளுக்கான பணத்தை வைத்துக் கொள்வதற்கு மட்டுமே அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று சோஷியலிஸம் கூறுவதை போன்று இஸ்லாம் கூறுவதில்லை. எங்கு ஊதியம் பெறுபவரும் மற்றும் ஊதியம் வழங்குபவரும் வருமானத்தின் அப்படையில் சமமாகிவிடுவார்களோ அப்படிப்பட்ட பொருளாதார அமைப்பை இஸ்லாம் விரும்பவில்லை. மாறாக இஸ்லாம் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றது:

அதாவது நாட்டின் தேசிய செல்வமானது சமுதாயத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும்; மேலும் அவை சமூகத்தின் ஒவ்வொரு பிரிவு மற்றும் மட்டத்தின் மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்; சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினர் வரையிலும் சில அடிப்படை தேவைகள் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்; இதற்காக சமுதாய செல்வத்தை பயன்படுத்த வேண்டும் என்று இஸ்லாமோ கூறுகிறது.

உதாரணமாக, இஸ்லாம் இந்த போதனையை வழங்குகின்றது. அதாவது ஒவ்வொரு குழந்தையும், அது எந்த குடும்பத்துடன் அல்லது எந்தப் பகுதியுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதற்கு அப்பாற்பட்டு அதற்கு முறையான கல்வி கிடைத்திட வேண்டும்; அப்போதுதான் அந்த குழந்தை திறமை படைத்ததாக ஆக முடியும். மேலும் சமுதாயத்திற்கு பயனளிக்க கூடிய நபராகவும் ஆகமுடியும். இதேபோன்று இன்னும் ஏராளமான வசதிகள் இருக்கின்றன. அவை சமத்துவத்தின் அடிப்படையில் எல்லா இடத்திலும் வழங்கப்பட வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

தற்போதைய காலத்தின் அமைப்புகள் இந்த வசதிகளை வழங்குவதாக விளம்பரப்படுத்துகின்றன. ஆயினும், எந்த அளவிற்கு இஸ்லாமிய போதனைகள் எதிர்பார்க்கின்றனவோ அந்த அளவிற்கு இருப்பதில்லை. அடுத்து, இஸ்லாம் ஓர் அடி முன்னால் சென்றவாறு இந்த போதனையை நல்குகின்றது. அதாவது நீங்கள் உங்களுடைய மக்களுக்கு மட்டும் உதவி செய்யாதீர்கள்; மாறாக, உங்களுடைய அண்டை அயலாரையும் கருத்தில் கொள்ளுங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது.

ஆக நாடுகள் தங்களது அண்டை நாடுகளின் மேம்பாட்டிற்காகவும் தங்களது வளங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் ஒரு நாடு தேவையுடையதாக இருந்தாலோ அல்லது ஏதாவது ஒரு வகையில் இழப்பிற்குரியதாக இருந்தாலோ பின்னர் அதற்கு உதவி செய்வது அதன் அண்டை நாட்டின் மீது கடமையாகும். பிறருக்கு பயனளிப்பதற்காக இந்த தொடர் நீண்டு கொண்டே செல்ல வேண்டும்; மேலும் நாடுகள் வெறும் தனது நெருங்கிய ஓர் அண்டை நாட்டிற்கு மட்டும் அல்லது அண்டை நாடுகளுக்கு மட்டும் உதவி செய்ததோடு நின்று விடக்கூடாது; மாறாக தனது வளங்களை உலகின் ஏனைய ஏழை மற்றும் இழப்பிற்குரிய நாடுகளின் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தமது செல்வத்தை பயன்படுத்த வேண்டும் என்று நிச்சயமாக இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

மற்றொரு விஷயத்தையும் நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அது இதுவாகும்: அதாவது அல்லாஹ் பல்வேறு நாடுகளுக்கு செல்வங்களுக்கான பல்வேறு வழிமுறைகளையும், கனிம வளங்களையும் அருளியுள்ளான். எனவே ஒரு நாடு தனது செல்வத்தை தனக்காக மட்டுமே பயன்படுத்தி கொள்வது ஆகுமற்றதாகும். தேவையுடைய ஏழை நாடுகள் இருக்கும் நிலையில் அப்படிப்பட்ட நாடுகளுக்கு அந்த நாடு உதவி செய்ய வேண்டும். மேலும் எவர்கள் அறிவு படைத்திருக்கின்றார்களோ மேலும் எவர்கள் அந்த செல்வத்திலிருந்து பயன் பயன் பெறுகின்ற ஆற்றலை அறிந்திருக்கின்றார்களோ அவர்கள் எவ்வித சுயநலமுமின்றி பிறருக்காகவும் அதனை பயன்பட செய்ய வேண்டும். அதில் எந்தவிதமான மறைமுகமான நோக்கமும் இருக்கக் கூடாது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துடனான நட்பு அல்லது கூட்டணியின் அடித்தளத்தின் அடிப்படையில் மட்டும் பிறருக்கு உதவி செய்ய வேண்டுமா? கூடாதா? என்பதை தீர்மானிக்கக் கூடாது. எவ்வகையான விருப்பச் சார்பும் இருத்தல் கூடாது. மாறாக, பிறரை அவர்களின் சொந்தக் கால்களில் நிற்கச் செய்ய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். அநீதியான நிபந்தனைகளை பிற நாடுகளின் மீது விதிக்கக்கூடாது. அந்த நாடுகள் சில நிபந்தனைகளை முழுமை செய்து விடாத வரை அவர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்றோ அல்லது அவர்கள் ஏதாவது மூன்றாம் நாட்டுடன் தொடர்பு வைப்பதற்கு தயாராகி விடாத வரை அவர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்ற சூழலையோ உருவாக்கக் கூடாது. மேலும் தொழில் நுட்பங்களில் உதவி வழங்குகின்ற நாடுகள் எத்தகைய கடும் நிபந்தனைகளை விதிக்கக் கூடாதென்றால் அதன் கீழ் உதவி பெறும் நாடு தனது சொந்த நாட்டின் இயற்கை வளங்களையே பயன்படுத்த முடியாமல் ஆகிவிடக் கூடாது. மேலும் அந்த நிபந்தனைகளின் கீழ் அந்த நாட்டின் இயற்கை வளங்களிலிருந்து உதவி செய்யக் கூடிய நாடே அதிகம் பயன்பெறக் கூடியதாக இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட அநீதியான நடவடிக்கைகள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முற்றிலும் எதிரானவையாகும்.

மேலும், இவற்றால் நிம்மதியின்மை இன்னும் அதிகரித்து விடும். மேலும் சமூகத்திலும் நிம்மதியின்மை ஊடுருவி விடும். மேலும் விவகாரம் இந்த நிலையை அடைந்துவிடுகின்ற போது பின்னர் எப்படிப்பட்ட ஒரு நேரம் வரும் என்றால் அதில் நிம்மதியின்மை மற்றும் அநீதியின் உணர்வின் கீழ் பகைமைகளும், வெறுப்புகளும் தோன்றத் துவங்கி விடும். மேலும் விவகாரங்களை அப்படியே விட்டுவிட்டால் பின்னர் சம்பந்தப்பட்ட நாட்டிலும், சர்வ தேச மட்டத்திலும் அமைதி சீர்குலைந்து விடும். மேலும் இவை அனைத்தும் இன்று நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது செல்வாக்கு மிக்க தரப்பினர் தங்களது செல்வத்தை மிகவும் சரியாகவும், உகந்த வகையிலும் பயன்படுத்தினால் பின்னர் குறிப்பாக வளரும் நாடுகளில் செல்வந்தர் மற்றும் ஏழைகளுக்கு இடையிலான தொலைவு இதன் மூலம் மிக பெருமளவில் குறைந்து விடும். மேலும் அதன் செல்வமும், உதவியும் ஏழை நாடுகளின் உதவிக்காக சிறப்பிற்குரியதாக ஆக்கப்பட வேண்டும். ஒருவேளை சர்வதேச அளவில் அதனை சரியான ரீதியில் செலவு செய்திருந்தால் பின்னர் நிச்சயமாக இன்று நாம் பார்த்துக் கொண்டிருப்பதை போன்று நாடுகளுக்கிடையில் தற்போது அதிகரித்து வருகின்ற இப்படிப்பட்ட அநீதியான சூழலையும், பகைமையையும் நாம் பார்த்திருக்க மாட்டோம்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

உலகிலுள்ள ஏழை மக்களுக்கான உதவிகள் மற்றும் ஒத்துழைப்பின் நோக்கத்திற்காக ஏராளமான அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் மிக

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 23-30 OCTOBER 2025 Issue No.43 &44

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முக்கியமான அமைப்புகள் ஐ.நா சபையின் பல்வேறு நிறுவனங்களாகும். அவை இன்று உலகிலிருந்து ஏழ்மை மற்றும் வறுமையை அழிப்பதற்காக நிறுவப்பட்டு உள்ளன. ஆனால், வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால் ஐ.நா நிறுவப்பட்டு 60 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் ஆகிவிட்டது. ஆனால் ஏழை நாடுகள் இன்னும் பின்தங்கியவையாகவும், வஞ்சிக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. அதே நேரத்தில், முன்னேற்றமடைந்த நாடுகள் மேலும் பணக்கார நாடுகளாகவும் வலிமை வாய்ந்த நாடுகளாகவும் ஆகிக் கொண்டிருக்கின்றன.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இந்த நிரந்தர அநீதிக்கான அடிப்படை காரணம் இதுவாகும். அதாவது அல்லாஹ்வின் புறமிருந்து மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அனைத்தும் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானதாகும் என்ற இந்த விஷயத்தை உலகத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்று குறைந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் வசிக்கக்கூடிய அந்த மக்கள் மட்டும் இந்த பிரச்சனைக்கு இரையாகவில்லை. மாறாக கடந்த சில ஆண்டுகளாக நிகழக்கூடிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக முன்னேற்றமடைந்த நாடுகளின் மக்களும் இதன் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதற்கான காரணம் என்னவென்றால் நாடுகள் தங்களது பரந்துபட்ட வளங்களையும், காரணிகளையும் சரியான முறையில் பயன்படுத்தவில்லை. மேலும் தங்களது செல்வத்தை எல்லா மக்களுடைய பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்காக செலவிடுவதற்கு பகரமாக தேவையற்ற ஆடம்பரங்களிலும், வீணான செலவுகளிலும் சிந்திக்காமல் கணக்கின்றி செலவிடுகின்றன. நாம் இதன் விளைவை ஐரோப்பாவில் கண்டு கொண்டிருக்கின்றோம். அதாவது அங்கு ஐரோப்பிய நாடுகளைப் போன்று செல்வந்தர் அல்லாத சில நாடுகள் இருக்கின்றன: ஆனால் அவை தனது பணக்கார ஐரோப்பிய அண்டை நாடுகளைப் பின்பற்ற முயன்றன. விழிப்புணர்வு மிக்க வழியை மேற்கொள்வதற்கு பகரமாக அவை தனது தகுதியை தாண்டி எப்படிப்பட்ட ஆசைகளை முழுமை செய்வதற்கு முயற்சி செய்தன என்றால் அதற்கு உண்மைத்துவத்துடன் எந்த தொடர்புமே இருக்கவில்லை. மேலும் தற்போது தனது செயல்களின் விளைவை அவை அனுபவித்து கொண்டிருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய நாடுகள் ஓரளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்தன . ஆனால், தற்போது அவர்களும் கேள்வி கேட்கத் துவங்கி விட்டனர்; மேலும், இறுதியில் எதுவரை தான் நாம் இந்த ஏழை நாடுகளுக்கு உதவியை தொடர்ந்து கொண்டிருப்பது ? என்று சிந்திக்கும் நிர்பந்தத்திற்கு அவர்கள் ஆளாகி விட்டனர்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

பிரச்சினைக்கான அடிப்படை காரணங்களும் அதிகரித்து வருவதால் பகைமைகள் இரு தரப்பிலுமே உருவாகின்றன. ஒருபக்கம் உதவிக்கான விண்ணப்பம் செய்யக் கூடிய நாடுகள் விநோதமான கோரிக்கைகளை முன்வைக்கின்றன. மற்றொரு பக்கம் செல்வந்த நாடுகள் பெரும் பரந்துபட்ட நலனுக்காக தேவைக்கேற்ப தியாகம் செய்வதற்கு தயாராக இருப்பதில்லை. இந்த இரண்டு காரணங்களால் தற்போதைய நிலைமை மேலும் சீர்கெட்டு விட்டது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஆனால் இஸ்லாம் இந்த அறிவுரையை வழங்குகின்றது. அதாவது சிறந்த சூழல் அதாவது அமைதி மற்றும் ஒற்றுமைக்கான சூழல் என்பது இரண்டு தரப்பும் பரஸ்பரம் இணைந்து பரந்துபட்ட நோக்கத்திற்காக, நலனுக்காக பணி செய்யும் போது தான் நிலைபெற முடியும் என்று இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

ஏழைகளும் நிச்சயமாக தமது பொறுப்பை உணர வேண்டும்; இன்னும் உழைக்க வேண்டும்; அப்போதுதான் அவர்கள் செல்வத்திலிருந்தும், வளங்களிலிருந்தும் பயன்பெற முடியும். மேலும் மற்றொரு பக்கம், செல்வந்தர் தனது சகோதர, சகோதரிகளுக்கு உதவி செய்வதற்காக உண்மையான தியாக மனப்பான்மையை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் இதனையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் செல்வமும், வளங்களும் அல்லாஹ்வால் வழங்கப்பட்டவை ஆகும்; எனவே இந்த வளங்கள் எல்லா நிலையிலும் அல்லாஹ்வினுடைய படைப்பினங்களின் உரிமைகளை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அதாவது மிகவும் வேதனையுடன் இதனை கூறநேரிடுகின்றது. அதாவது இதுபோன்ற சிறந்த விதிமுறைகளை இன்றைய முஸ்லிம் உலகம் அதாவது எவர்களுக்கு இந்த போதனைகள் வழங்கப்பட்டிருந்தனவோ அவர்களும் மேற்கொள்ளவில்லை. அதேபோன்று அதன்படி முஸ்லிம் அல்லாத உலகமும் இந்த வழிமுறைகளின்படி அமல் செய்யவில்லை. மக்களின் உரிமைகளை செலுத்துவதாக வெற்று வாதங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், நிச்சயமாக முன்னேற்றமடைந்த நாடுகளிலும் கூட ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான நபர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் பசி மற்றும் ஏழ்மைக்கு இரையாகியுள்ளனர்.

ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இறுதியில் நான் இதனை கூற விரும்புகின்றேன். அதாவது இது மிகவும் பரந்துபட்ட கருத்தாகும். நான் இந்த பரந்துபட்ட கருத்தின் ஒரு பகுதியை மட்டுமே எடுத்துரைத்துள்ளேன். அதன் ஒரு சிறிய அம்சத்தையே எடுத்துரைத்துள்ளேன். ஒருவர் மற்றவரின் உரிமையை செலுத்துவதின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பது தற்போது நிச்சயமாக உலகின் அவசியமாக ஆகிவிட்டது. அதாவது உலகம் ஓர் உலகளாவிய கிராமமாக ஆகிவிட்டது. நாம் ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்துவதில் தோல்வி அடைந்து விட்டால் பின்னர் ஏற்கனவே உருவாகிவிட்ட அந்த நிம்மதியின்மை என்பது அபாயகரமான மற்றும் நாசத்திற்குரிய விளைவுகளை வெளிப்படுத்தக் கூடியதாக அமையும். வரலாற்றின் மீது நாம் பார்வையை செலுத்தினால் நமக்கு இது தெரியவருகின்றது. அதாவது இதற்கு முந்தைய இரண்டு உலகப்போர்களுக்கான மிகப்பெரிய காரணம் பொருளாதார நெருக்கடியாக இருந்தது. அதன் மூலம் எங்கு நீங்கள் வசித்துக் கொண்டு இருக்கின்றீர்களோ அந்தப் பகுதி தாக்கத்திற்கு உள்ளாகியது. இந்தப் பகுதிகளும் தாக்கத்திற்குள்ளாகின. அதுபோன்ற நிலைமை மீண்டும் மேலோங்கி விட்டால் பின்னர் எவர் பாதுகாப்பாக இருப்பார்; எவர் பாதுகாப்பற்றவராக இருப்பார்? என்பதை கூறுவது மிகவும் கடினமாகிவிடும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்......

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad